Registered No. M 5068.

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]  ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.  [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி ஹு ஆடிமீ 4உ 19—7—1948 ஹிஜிரி 1367 ரம்ஜான்மீ 11உ திங்கட்கிழமை. } இதழ் 26

## வீரத்தியாகி பிரிகேடியர் உஸ்மான்.

தாய் நாட்டைத்தாக்கிய பட்டாணியர்களை எதிர்த்துப்போர் புரிந்த வீரன்; நாட்டைக்காக்க உயிரை அர்ப்பணித்த தீரன் முப்பத்தைந்து வயது நிரம்பாத பிரிகேடியர் உஸ்மானின் வீரத்தியாகம், சுதந்திர இந்திய ராணுவத்துக்கு வழிகாட்டியாக என்றுமே சரித்திரத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கப்போகின்றது அவருடைய வீரச் செயல்கள் நம் ராணுவ சரித்திரத்தில் மிக முக்கியஸ்தானத்தைப் பெறுவதுடன் வருங்கால சந்ததிகளுக்கு உத்வேகத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. அவரை உயிருடன் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு ரூ 50,000 இனாம் அளிப்பதாய் காஷ்மீர்-போலிசுதந்திர சர்க்கார் அறிவித்ததிலிருந்தே எதிரிகள் அவரைக் கண்டு எந்த அளவுக்கு பீதியடைந்திருந்தனரென்பது வெளியாகின்றது. இந்திய ராணுவத்தின் முன்னணியில் நின்று போராடி தாய் நாட்டுக்காக கடைசி துளி ரத்தத்தையும் உஸ்மான் சிந்தினார். காஷ்மீர் யுத்தம் பூராவிலும் நவ்ஷேரா பகுதியில் நடந்த யுத்தமே மூர்க்கமானது. அதில் காட்டிய பராக்கிரமத்தால் எங்கும் "நவ்ஷேரா போர்வீரன்" என்று உஸ்மான் விளங்கினார். ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் அடங்கிய ராணுவத்துக்கு அவர் தலைமை தாங்கினார். எல்லோருடைய நம்பிக்கையையும் நன்மதிப்பையும் அவர் பெற்றிருந்தார். தன்னுடைய சிப்பாய்களுக்காக எந்த நிமிஷத்திலும் தன்னுயிரை அர்ப்பணிக்கத் தயாராயிருந்ததே அதற்குக் காரணம். அதனால் இந்தியாவில் பிரபல்யமடைந்திருந்த பிரிகேடியர் உஸ்மானின் கீர்த்தி இன்று உலகம் பூராவிலும் வியாபகமடைந்துவிட்டது.

இயற்கை எழில்கள் நிறைந்த ரம்மியமான காஷ்மீர் மண் மீது ஷேர்வாலிக்குப்பிறகு இன்று மீண்டும் பிரிகேடியர் உஸ்மான் ரத்தத்தை சிந்தியிருக்கிறார். காஷ்மீர் அரங்கத்தில் இந்தியாவின் வீர சிப்பாய் இந்தியாவுக்காக உயிரை அர்ப்பணித்திருக்கிறார். பிரிகேடியர் உஸ்மான் காஷ்மீர் போர் அங்கத்தை வென்றது மட்டுமின்றி இந்தியர் பூங்கா செழிக்கவும் தன் ரத்தத்தை புதிய முறையில் பாய்ச்சியுள்ளார்.

ஆத்மீகத்தியாகத்தால் இந்திய ஐக்கிய சமுதாயத்தை உருவாக்கிய மஹாத்மா காந்திக்கு அடுத்த ஸ்தானம் பிரிகேடியர் உஸ்மானுக்குக் கிடைத்திருக்கிறது. பாபூஜியின் ரத்தத்தால் புனிதமடைந்த இந்திய ஐக்கிய சமுதாய உணர்ச்சி மீது படிந்திருந்த தூசியை பிரிகேடியர் உஸ்மான் தன்னுடைய ரத்தத்தால் போக்கிப் பிரகாசிக்கச்செய்தார்.

நாடு குண்டர்களின் காலித்தனத்துக்கு இலக்காகி சீர்ழிந்து கொண்டிருந்த வேளையில், குறுகிய மனப்பான்மையுள்ள அரசியல் நாசகாரிகள் அதிகாரத்தைக் கைபற்ற விசுவாசம் விசுவாசமென்று கூச்சலிட்டுக்கொண்டு சிறுபான்மையினரை கொன்றுகுவித்துக்கொண்டிருந்த சமயத்தில் இந்தியத் தாயின் இவ்விரண்டு சத்புத்திரர்களும் இரண்டு அரங்கங்களில் புனிதப்போர் புரிந்து கொண்டிருந்தனர்.

ஒருபுரம் டில்லியில் அக்ரமத்தையும் பலாத்காரத்தையும் எதிர்த்து உயிரைப் பணயம் வைத்து இந்திய சமுதாயத்தின் வயோதிகத்தந்தை போராடிக்கொண்டிருந்தார். இன்னொருபுரம் காஷ்மீரின் பனி உரைந்த மலை உச்சிகளில் புனிதத்தந்தையின் சத்திய வாக்கு

களை பிரிகேடியர் உஸ்மான் மெய்ப்பித்துக் காண்பித்து வந்தார்.

தன்னுடைய சமூகத்தைச் சேர்ந்தவர்களையே துவம்சம் செய்து முன்னேறிக் கொண்டிருந்த பிரிகேடியர் உஸ்மான் கையில் இந்தியக்கொடிபறந்து கொண்டிருந்தது. நவ இந்தியாவை உருவாக்க பெருமிதத்துடன் நெஞ்சைஉயர்த்தி தலைநிமிர்ந்துகண்களிலே அசையா உறுதி பிரகாசிக்க அஞ்சா நெஞ்சத்தால் ஏற்படும் ஆத்மீக அமைதி முகத்திலே தாண்டவமாட பிரிகேடியர் உஸ்மான் காஷ்மீர் மலை உச்சிகளிலிருந்து பாபூஜியின் வார்த்தைகளிலுள்ள உண்மையை உலகுக்கு எடுத்துக் காட்டி வந்தார்.

"முஸ்லிம் அன்னியன்; அவனை நம்புவதற்கில்லை; அவன் தாய்நாட்டின் உண்மையான விஸ்வாசி ஆக முடியாது" என்று வகுப்புவாத விஷமருந்தி மயங்கிய உலகம் சொல்லிக்கொண்டிருந்தது.

"நீங்கள் நிதானமிழந்து விட்டீர்கள். வழிதவறிச்செல்லுகின்றீர்கள். நீங்கள் அனைவரும் ஒன்று நீங்கள் அனைவரும் இந்தியர்கள் வேற்றுமை மயக்கத்தில் சகோதரர்களின் ரத்தம் சிந்தவேண்டாம்" என்று கிழத் தந்தை கதறிக்கொண்டிருந்தார்.

காஷ்மீர் மலை உச்சிகளில் நின்று நவ இந்தியாவின் மீது தன்னுடைய சாயலையும் போட்டுக் கொண்டிருந்த பிரிகேடியர் உஸ்மானின் அந்தரங்க சுத்தியையும் தேசப்பற்றையும் பார்த்து முஸ்லிம்களை சந்தேகித்து வந்த குறுகிய மனப்பான்மையுள்ள பேர்வழிகள் பிரமித்து வாயைப் பொத்திக் கொண்டிருந்தனர்.

வகுப்பு வாதிகள், சமுதாய விரோதிகளால் தேசியத் தந்தை அநியாயமாய்க் கொலையுண்டார். கொலைகாரர்களே பாபூஜியின் எதிரிகள் என்பது விளங்கிவிட்டது. கிழ பாபூஜி சத்திய சீலரென்றும் உண்மையை அஞ்சாமல் எடுத்துச் சொல்லும் உத்தமரென்றும் உலகம் கண்டுகொண்டாய்விட்டது.

ஆயினும் இன்னொரு அங்கத்தில் ஒரு போராட்டம் நடந்துகொண்டிருந்தது. இந்தியாவின் எதிர்காலத்தை தீர்மானிக்கவும் பாபூஜியின் வார்த்தைகளை மெய்ப்பித்துக் காட்டவும் பிரிகேடியர் உஸ்மான் காஷ்மீர் அரங்கத்தில் போராடிககொண்டிருந்தார். இந்தியாவில் தேசீயத்துக்கும் வகுப்புவாதத்துக்கும் இடையே நடந்துவந்த யுத்தத்தில் பிரிகேடியர் உஸ்மானின் வீரத்தியாகம் தேசீயத்துக்கு மஹத்தான வெற்றியை தேடிக் கொடுத்துவிட்டது. இந்திய சமுதாய விதியை பிரிகேடியர் உஸ்மான் தன்னுடைய ரத்தத்தைக் கொண்டு எழுதிச்சென்ருர்.

வீரத்தியாகி உஸ்மானைக் குறித்து இந்திய முஸல்மான்கள் கண்ணீர் வடிக்க வேண்டுமா!

பிரிகேடியர் உஸ்மானைப் போன்ற உத்தம வீரர்களைக் உற்பத்தி செய்யக்கூடிய சமூகம் எதற்காக வருந்த வேண்டும்? வாலிப உறுதி, வாலிப வீரம் படைத்த வாலிப உஸ்மான் இந்திய முஸல்மான்களை பாதுகாப்பதில் உயிர் அர்ப்பணித்ததைக்குறித்து இந்திய முஸல்மான்கள் பெருமைப்பட உரிமை உண்டு. ஒரு உஸ்மானுக்காக வருந்துவதை விட்டு தேசீய கவுரவத்தைக் காக்க தாய் நாட்டுப் புழுதியை தங்களுடைய ரத்தத்தால் சிவக்க வைக்கத்தயங்காத இலட்சக்கணக்கான உஸ்மான்களை தோற்றுவிப்பதில் இந்திய முஸல்மான்கள் முனைவார்களாக!

---

## காங்கிரஸில் மதவாதம்.

"உங்கள் மதத்தையும், கலாசாரத்தையும் காப்பாற்ற விரும்பினுல் சோஷலிஸ்டுகளுக்கு எதிராக காங்கிரஸ் அபேக்ஷகர்களை தேர்ந்தெடுங்கள். சோஷியலிஸ்டுகள் ஆதரிப்பது உர்தூ, ஹிந்தி லிபிகளில் எழுதப்படும் ஹிந்துஸ்தானி காங்கிரஸ் விரும்புவது கலப்பற்ற ஹிந்தி. உர்தூ பாஷையில் உங்கள் கலாசாரம் காக்கப்படுமா என்பதை நீங்களே முடிவுசெய்ய வேண்டும். சோமநாத ஆலயத்தை மீண்டும் கட்டுபவர்கள் ஸர்தார் படேலும் இதர காங்கிரஸ்காரர்களுமே யாவர் ஜமீன்தாரித்துவம் ஒழிந்தாலும் மதஸ்தாபனங்களின் வருமானம் குறையாமலும் அவைகளுக்குப் போதிய அளவுக்கு வருமானம் கிடைக்கும்படியும் அரசாங்கம் கவனித்துக்கொள்ளும்"

என்னே! காலத்தின் மாறுதல்! மேற்கூறிய விதமாக ஐக்கியமாகாண பிரதமர் பண்டித கோவிந்த வல்லபபந்த் பேசினுரென்ருல் யாராவது நம்புவார்களா! ஆனல் பேசியிருக்கிருர். காலமாறுதல் அவரை அவ்விதம் பேசும் அளவுக்குக் கொண்டுவந்துவிட்டது. ஆயினும் காலமாறுதலை எதிர்த்து ஆத்மாவை அர்ப்பணித்த மஹாத்மாஜியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த பண்டிதபந்தின் பேச்சால் பாபுஜியின் ஆத்மா எவ்வளவு வேதனையுற்றிருக்குமென்று எண்ணி வருந்தாமலிருக்க முடியுமா? பண்டிதபந்தின் பேச்சை விளக்க வேண்டிய அவசியமில்லை. ஆயினும் மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியின் அமைப்புக்கு இதுதான் அறிகுறிகளா! கட்சி அரசியலும் தேர்தல்களும் மனிதர்களை எதில் கொண்டுபோய் விடுகின்றன என்பதற்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமா? இன்று காங்கிரஸும் காங்கிரஸ்காரர்களும் கூட மதத்தைக் காட்டி கலாசாரம் போர்வையைப் போர்த்தி தேர்தல்களில் ஓட்டுவாங்க வேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டனர். அவர்களுடைய பரிதாபகரமான போக்கு நாட்டை எப்பக்கம் இழுத்துச்செல்லுமென்று தெரியவில்லை.

## உர்தூவின் துர்கதி.

பாகிஸ்தான் அமைந்தபிறகு இந்தியாவில் உர்து பாஷைக்கு ஏற்பட்டிருக்கும் அல்லது ஏற்படவிருக்கும் நஷ்டத்திற்கு ஈடு சாத்தியமில்லை. அன்று ஐக்கியமாகாண பள்ளிக்கூடங்களில் ஆரம்பவகுப்புக்களிலிருந்தே உர்து, ஹிந்தி பாஷைகள் சம அந்தஸ்து பெற்றிருந்தன. ஆனால் இன்று ஹிந்தி கட்டாய பாடமாகவும் உர்து, இஷ்ட பாடமாகவும் வைக்கபபட்டிருக்கிறது. அத்துடன் நீதி ஸ்தலங்களிலிருந்து அனுப்பப்படும் சம்மன்கள் இனி ஹிந்தியில் அச்சடிக்கப் படவேண்டுமென்று சம்மந்தப்பட்ட இலாகாவுக்கு உத்திரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் கிடைத்துவிட்டதென்றும் காலில் ஒரு பங்கு இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சி அமைப்பதில் வெற்றி கிட்டிவிட்டதென்றும் முஸ்லிம்கள் சந்தோஷிக்கின்றனர். நிதான புத்தியுடன் சிந்தித்துப் பார்க்கும்போது அமைந்திருக்கும் பாகிஸ்தான் நாலைந்துகோடி இந்திய முஸல்மான்களின் பாஷைக்கும், கலாச்சாரத்துக்கும் சாவுமணி அடித்திருப்பது விளங்கும்.

இன்றைய போக்கிலேயே பாகிஸ்தான் இனியும் போய்க்கொண்டிருந்தால் இந்திய முஸல்மான்களுக்கு இந்தியா பாகிஸ்தான் இரண்டிலும் இடமில்லாமல் போய்விடுமென்பது நிச்சயம். இன்றிலிருந்து ஐம்பது வருஷங்களுக்குள் இந்தியமுஸ்லிம் சமூகம் வருமை மிகுந்த நாடோடிகளின் ஒரு கூட்டமாகத்தான் இருக்கமுடியும். முஸ்லிம்களின் இஷ்டப்படி நாட்டைப் பிரித்து பாகிஸ்தான் கொடுத்துவிட்ட பிறகும் பாகிஸ்தானில் முஸ்லிம் அல்லாதார் உயிர்வாழவும் முடியாமலிருக்கையில் இந்தியா மட்டும் முஸ்லிம்களுடன் நேர்மையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்க நமக்கு உரிமை ஏது?

இந்தியாவில் உர்தூவின் துர்க்கதியைப்பார்த்து ஒவ்வொரு உர்து பாஷை பேசுபவனுடைய மனமும் நோகும் என்பது வாஸ்தவந்தான். ஆயினும் இது எதிர்பார்த்ததற்கு மாறுபட்ட விஷயமல்ல. இன்று காங்கிரஸ் ஆட்சிமட்டும் இல்லாமலிருந்திருந்தால் ஒருக்கால் இந்தியாவின் முஸ்லிம் என்று சொல்லிக் கொள்வதும், உர்து பேசுவதும்கூட குற்றமாகக் கருதப்பட்டிருக்கலாம்.

அரசியல் அறிவு வளர்ச்சி அடைய
“ஆஸாத்”
அவசியம் படிக்கவேண்டும்.

## ஹைதராபாதும் முஸ்லிம்களும்

ஹைதராபாத்தில் பொறுப்பாட்சி ஏற்படுத்த மறுப்பதன் மூலம் நிஜாம் உண்டாக்கியிருக்கும் சூழ்நிலை ஹைதராபாத் மக்களுக்கு துன்பங்களை விளைவித்திருப்பது மட்டுமின்றி அதனால் ஹைதராபாத் நிஜாமின் வம்சமே நிலைத்திருக்க முடியாத அபாயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஹைதராபாத் மக்களையும் ஆஸிப்ஜா வம்சத்தையும் அழிவுப் படுகுழியில் விழாமல் இன்னும் நிஜாம் காப்பாற்றலாம். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. ஹைதராபாத்தில் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை அமைத்து இந்திய யூனியனுடன் நல்லுறவு கொள்வதில் காலங் கடத்தலாகாது.

இந்திய யூனியனின் வயிற்றுக்குள் ஒரு எதேச்சாதிகார ஆட்சி இருந்து வருவதை எந்த ஒரு அறிவுள்ள அரசியல்வாதியும் ஆதரிக்கமுடியாது. காஸிம் ரஸ்வியையும் நிஜாம் அரசாங்கத்தின் இன்றைய போக்கையும் இந்திப முஸல்மான்கள் வெறுப்புடன் நோக்குகின்றனர் ஹைதராபாத்தின் அபாயகரமான விளையாட்டால் இஸ்லாமுக்கு உயர்வோ அல்லது முஸ்லிம்களுக்கு நன்மையோ ஏற்படமுடியாதென்று இந்திய முஸல்மான்களுக்குத் தெரியும்.

இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் சேவைசெய்வது ஹைதராபாத் கில்லாடிகளின் லட்சியமுமல்ல. முஸல்மான்களை பலியிட்டு தங்களுடைய பாஸீஸத்தை பலப்படுத்திக்கொள்ளவே அவர்கள் விரும்புகின்றனர். இந்நிலையில் ஹைதராபாத் பிரச்னையை ஹிந்து, முஸ்லிம் வேற்றுமைக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டு பார்க்காமல் பாஸீஸத்துக்கும் ஜனநாயகத்துக்குமிடையே நடக்கும் யுத்தமாகக் கொள்வதே நியாயமாகும்.

### வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக, சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்.

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

# ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 19—7—'48 திங்கட்கிழமை { இதழ் 26


## முஸ்லிம்களே! போக்கை மாற்றுங்கள்.

மனிதர்களின் தனிப்பட்ட அல்லது கூட்டு வாழ்க்கையின் நிர்மாணம் சம்மந்தப்பட்டவரை நிகழ்கால நிலைமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை நிகழ்கால நிலைமைக்குக் காரணமாயிருந்த கடந்த காலத்தையும் அதிலுள்ள குறைகளையும் எண்ணிப் பார்த்து அவ்வித குறைகள் இல்லாததொரு எதிர் காலத்தை உருவாக்கவே அறிவுள்ள மனிதன் உழைக்கிறான். சிந்தித்து சீர்தூக்கி ஜாக்கிரதையுடன் உருவாக்கப்பட வேண்டியது எதிர்காலமே யாகும். மனிதன் எதிர்காலத்துக்காகவே முயற்சிக்கிறான். முயற்சிக்கவும் வேண்டும். முஸ்லிம்களின் கடந்த பத்து வருஷங்களை நோக்கும்போது தவறான போக்கு, தவறானலட்சியம் தவறான கோஷங்களைத்தவிர வேறொன்றுமேதென்படவில்லை. பாகிஸ்தான்என்றசொல்லில்ஒரு விதகவர்ச்சி இருக்கத்தான்செய்தது பாகிஸ்தானை ஆதரித்து நடந்தபிரசாரமும் வெகு அலங்காரமாகத்தான் இருந்தது ஆனால் இன்று பாகிஸ்தான் அமைந்தபிறகு எதிர்த்தவர்கள் ஒருபுறமிருக்க பாகிஸ்தானை ஆதரித்தவர்களும் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டனர். பம்பாயில் நடந்த காந்தி ஜின்னா சமரசப்பேச்சு வார்த்தையின்போது பாகிஸ்தான் என்றால் "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்றார் மிஸ்டர் ஜின்னா. ஆனால் இன்று பாகிஸ்தான் என்றால் நாலரை கோடி இந்திய முஸல்மான்களின் வெளியேற்றம்; ஐந்துகோடி பாகிஸ்தான் முஸ்லிம்களின் அவதி; முஸ்லிம்களின் பொருளாதார நெருக்கடி; லட்சக்கணக்கான முஸ்லிம்களின் கொலை; கோடிக்கணக்கான ரூபாய் சொத்தின் நாசம்; பல்லாயிரக்கணக்கான சகோதரிகளின் கற்பிழத்தல்; மொத்தத்தில் இந்திய முஸ்லிம் சமூகத்தின் அழிவு என்ற உண்மையை யாரால் மறுக்கமுடியும் இந்தியாவை விட்டு வெளியேறி பாகிஸ்தானுக்கு சென்றவர்கள் அதிகாரிகளின் அசிரத்தையால் அகதி முகாம்களில் ஆயிரக்கணக்கில் இறந்ததும், ஒண்டவும் இடமின்றி இந்தியாவுக்கே திரும்பிவந்து திரிவதுந்தான் பாகிஸ்தானால் கண்ட பலன். இருப்பினும் பாகிஸ்தான் முஸல்மான்களின் மிகப்பெரிய இஸ்லாமிய ஆட்சியென்று சொல்லுவதை மிஸ்டர் ஜின்னா இன்றைக்கும் நிறுத்திய பாடில்லை பாகிஸ்தானால் ஏற்பட்ட நிலைமையை பிரத்தியட்சமாகப் பார்த்து அனுபவித்த பிறகும் அறிவுள்ள எவரும் ஏமாறமுடியாது. வேண்டுமானால் மிஸ்டர் ஜின்னா இன்னும் புளுகிக்கொண்டிருக்கட்டும். பாகிஸ்தான் என்றால் முஸ்லிம்களின் அழிவு, நாசம், அரசியல் மரணம் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது. இதுவரை பாகிஸ்தான் பெயரால் நாம் அடைந்திருப்பது அது தான். இதுவே நம் கடந்தகாலம். உணர்ச்சிமிகுந்த அர்த்தமற்ற கோஷங்கள், தவறான அரசியல்போக்கு வகுப்புவாத மனப்பான்மை, லீக் லீடர்களின் சுயநலம் ஞானசூன்யம், மதியீனம், பிடிவாதம் முதலியவைகளால் நாம் உருவாக்கிய கடந்த காலம்! இன்று இந்திய முஸல்மான்கள் ஒரு கட்டத்தில் நிற்கின்றனர். பின்னால் கடந்த காலமிருக்கின்றது. முன்னால் எதிர்காலக்கதவு திறந்துகிடக்கின்றது. கடந்தகாலம் நம்மை கைவிட்டு விட்டது. எதிர்காலம் தன்னுடைய பூரண சக்தியுடனும் கம்பீரத்துடனும் நம் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அலங்கரிக்க தயாராக நிற்கின்றது' நெருக்கடியான இக்கட்டத்தில் தங்கள் கடந்த காலத்தை உணர்ந்து எதிர்காலத்தை சரிவர புரிந்துகொள்ள முஸ்லிம்கள் முயற்சிப்பார்களா? பன்னிரண்டு நூற்றாண்டுகளாக சேகரித்த செல்வத்தை இழந்ததற்கு நம் மதியீனமே காரணமென்பதையும் எதிர்கால சுபிட்சத்தில் பங்குகொள்ள முடியுமென்றால் எவ்வழியில் சாத்தியம் என்பதையும் குறித்து சிந்திப்பார்களா? பிரிவினைக்குப்பிறகு லீகுக்கு இந்தியாவில் இடமில்லை. லீக் நீடிப்பதால் வெறுப்பும், அழிவுமே ஏற்படும் என்று மௌலானா அபுல்கலாம் ஆஸாத் லக்னோ மகாநாட்டில் கூறியதை காலத்தின் போக்கு உண்மையாக்கிவிட்டது. லீகைப் பொறுத்தும் பாகிஸ்தானைக் குறித்தும், வகுப்புவாத அரசியலின் நாசகரமான விளைவுகளைப்பற்றியும் மௌலானா ஆஸாத் வெளியிட்ட அபிப்பிராயம் நூற்றுக்கு நூறு உண்மை யென்பதை இன்று ஒவ்வொரு முஸ்லிமும் உணர்ந்து விட்டான். இத்தனை மாபெரும் நஷ்டத்துக்குப் பிறகும் இந்தியாவில் லீகுக்கு இடமில்லை யென்று முஸ்லிம் சமூகம் உணராமலிருக்க முடியுமா? ஆயினும் பாகிஸ்தானிலிருந்து அதிக தொலைவிலிருக்கும் சென்னை மாகாண முஸ்லிம்கள் இதுவரை உணர்ந்ததாகத்தெரியவில்லை இந்திய யூனியனிலிருந்து முஸ்லிம் லீகை ஒழித்துக்கட்ட வேண்டிய பொறுப்பு

# இளங்காளை பாபுகான்

[நாகை V. E. M. ஹமீது யூசுபுவத்தனி]

பாபுகான் என்றாலே மயிர் சிலிர்க்கும்; நெஞ்சம் பதறும்; கல் நெஞ்சும் கரைந்துவிடும். அவன் பம்பாய் வாசி. வயது 22. முஸ்லிம் சிறுவன். பள்ளி மாணவன். செல்வவந்தர் வீட்டுப் பிள்ளை. 1921-ல் காங்கிரஸ் அன்னியத்துணி பகிஷ்காரத்தைத் தொடங்கியபோது நாடெங்கும் அன்னியத் துணிகளைப் பகிஷ்கரிக்க மக்கள் முன்வந்து கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள துணிகளைத் தீவைத்துக்கொளுத்தினர். அவ்வியக்கத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கான மக்களில் இளங்காளை பாபுகானும் ஒருவன். இயக்கம் தீவிரமாகவும் வெற்றிகரமாகவும் நடப்பதைக்கண்ட வெள்ளை மிருகத்திற்கு நடுக்கங் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. இந்திய மார்க்கெட் இல்லாவிட்டால் தன் வாயில் மண்தான் என்பதை உணர்ந்த அம்மிருகம் "இந்த அடிமைகளுக்கு என்ன இவ்வளவு திமிர்?" என நினைத்து அடக்கு முறைகளை மிகவும் கடுமையாக பிரயோகித்தது தேசிய சிங்கங்களின்மீது. உயிர்களுக்கும் ஹானி ஏற்படுத்த முற்பட்டது அம்மிருகம். இயக்கத்தைக்கண்டு ஒரு பக்கம் பயந்தாலும் மறு பக்கம் இந்தியாவில் அன்னியத் துணி இறக்குமதி செய்வதை பிரிட்டிஷார் விட்டுவிடவில்லை பலவிடங்களிலும் இறக்க ஆரம்பித்தனர். ஆங்காங்கு மறியலும் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. பம்பாயில் இறக்கும்பொழுது அங்கும் அவ்வூர் மக்கள் பகிஷ்கார இயக்கம் நடத்த ஆரம்பித்தனர். கப்பலிலிருந்து இறக்கிக் காரில் நகருக்குள் கொண்டு வரும் சமயம், பகிஷ்கார இயக்கத்திற்குத் தலைமை தாங்கிய இளங்காளை பாபுகான் காரை மறித்துச் சத்தியாக்கிரகம் செய்தான். காரை ஓட்டி வந்த வெள்ளையனுக்கு கோபம் வந்துவிட்டது. "நகர வேண்டும்; இல்லையேல் உன்னை மோதித் தள்ளும்படி காரை ஓட்டிக்கொண்டு போய்விடுவேன்" என்றான். அதற்கு வீரன் பாபுகான் "நீ ஓட்டிக்கொண்டு போவதற்கு நாங்கள் விடப்போவதில்லை. எங்கள் உயிர்களை அர்ப்பணம் செய்தாவது உன் துணியை எங்கள் நாட்டில் தடை செய்ய வேண்டுமென்று நாங்கள் திடசங்கல்பம் செய்துகொண்டிருக்கிறோம்." என்பதாகக் கூறி காரின் முன் படுத்தான். அந்தத் திமிர் பிடித்த வெள்ளை காட்டுமிராண்டி காரை அவ்விளங்காளைமீதுவிட்டுச் சென்றான். கழுத்து அறைபட்டு உடலிலிருந்து ஆவி வீர சொர்க்கம் அடைந்

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க)

---

சென்னை மாகாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவின் இதர மாகாணங்களில் லீக் அஸ்தமித்து விட்டது. லீக் தலைவர்களின் சுயநலப் பிடியிலிருந்து விடுதலை யடையாமல் இருப்பது இம் மாகாண முஸ்லிம்களின் துரதிர்ஷ்டமாகும். பாம்பை விட்டு விட்டு கோட்டை மறைப்பது புத்திசாலித்தனமல்ல. அப்பாவிகளான முஸ்லிம்கள் மீது இரக்கப்பட்டு உடனடியாக லீக் பிணத்தை அடக்கம் செய்ய வேண்டியது இம்மாகாணத்தில் எஞ்சியிருக்கும் லீக் தலைவர்களின் கடமை. அவர்கள் அப்படிச் செய்யவில்லையேல் முஸ்லிம் பொதுமக்கள் அதைச் செய்ய வேண்டியது அவசியம். லீக் மனோபாவம் மாறவேண்டும். தாய்நாட்டின் எல்லைகளைக் கடந்து பாகிஸ்தானை நோக்குவது நிற்கவேண்டும். வகுப்புவாத அச்சுக்களை மாற்றுவதால் பிரயோஜனமில்லை. உடைத்தெறிய வேண்டும் நம் தாய்நாட்டின் நலனுக்காக வகுப்புவாத பிற்போக்கு தன்மையற்ற சிறந்த முற்போக்கு எண்ணம் நம் உள்ளங்களில் குடிகொள்ள வேண்டும். மத சம்பந்தமான உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு ஜமீயத்துல் உலமாய ஹிந்த் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மௌலானா அபுல்கலாம் ஆஸாத், பண்டிட் ஜவஹர்லால் நேரு முதலிய காங்கிரஸ் தலைவர்கள் நம் அரசியல் அரங்கத்தின் தனிப பெருந்தலைவர்களாவர் அவர்களிடம் நம்பிக்கை வைத்து அவர்கள் காட்டும் வழியே நாம் நடக்கவேண்டும். லீகின் பத்து வருஷ வகுப்புவாத அரசியல் இருபத்தைந்து கோடி ஹிந்துக்களை நம் எதிரிகளாக மாற்றி விட்டது. நம்மை அழிக்க முயற்சிப்பவர்களுடன் எவ்வாறு உறவுகொள்ள முடியுமென்று முஸ்லிம்கள் தயங்கலாம் ஆனால் அவர்கள் நம் சமுதாயத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என்பதை நாம் மறக்கக்கூடாது. அவர்களுடைய மனக்கசப்புக்கு லீக் பிரசாரமும், லீக் லீடர்களின் வாய்க்கொழுப்பும் கண்ணியமற்ற பேச்சுந்தான் காரணமென்பது நிச்சயம். இங்கிலையில் நேர்மை, ஒழுக்கம், அந்தரங்க சுத்தியுடன முயற்சித்து அன்பு, சமாதானம், சகிப்புத்தன்மை, பொறுமையின் மூலம் அவர்களை மீண்டும் நம் நண்பர்களாக்குவது நம்கடமை. அதுவே நம் வாழ்வின் அஸ்திவாரம். அதை அடையாதவரை இதர லட்சியங்களை அடையமுடியாது. ஓர் புதிய வாழ்க்கையின் புதிய நிர்மாணக்கட்டம் நம்மை எதிர்நோக்குகின்றது. தூய்மையான உள்ளத்துடன் அடியெடுத்துவைத்து லட்சியத்தை நோக்கிச் செல்லும் பாதையில் நாம் முன்னேற வேண்டும். தவறான வழியைமேற்கொண்டு லட்சியத்தை விட்டு விலகிச்செல்லாமல் இருப்போமாக!

# இஸ்லாமிய சமத்துவம்.

நபி நாயகம் அவர்கள் தன்வேலைக்காரரை அடித்துக்கொண்டிருந்த ஒரு ஸஹாபாவை நோக்கி "இவ் வேலைக்காரர் உங்களின் சகோதரராவார். இவரை ஆண்டவன் உங்களிடம் ஒப்புவித்திருக்கிறான். நீங்கள் உண்பதைப்போலவே இவருக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் உடுப்பதைப்போலவே இவருக்கும் உடுக்கக்கொடுங்கள்" என்று அறிவித்தார். ஒருவன் மற்றொருவனை (அவன் எவ்வளவு கீழ்பட்டவனாயினும்) அடிமை யென்றழைக்கக் கூடாதென்று இஸ்லாம் வெகு கண்டிப்பாய் எச்சரிக்கின்றது.

உயர்ந்தவர், தாழ்ந்தவர் எல்லோரும் ஆண்டவனுக்குமட்டும் அடிமைகளாக விருக்கின்றனர். ஆதலின் மனிதர்களை மனிதனே அடிமையாக்கிக் கொள்ள இஸ்லாம் இடந்தரவில்லை. இஸ்லாம் ஏற்படுத்தியிருக்கும் சமத்துவத்திற்குப் பங்கமேற்படாதிருக்கும் பொருட்டு வேலையாட்கள் தங்கள் முதலாளியை எஜமானனென்றழைக்கக் கூடாதென்றும் இஸ்லாம் தடுக்கின்றது. ஒருசமயம் நாயகம் அவர்களை ஒரு ஸஹா "எஜமானரே" என்று அழைத்தான் உடனே நாயகம் அவர்கள் "என்னை எஜமானனென்று கூறவேண்டாம். எஜமானன் ஒருவனே; அவன் தான் ஆண்டவன்" என்று அறிவித்தார்.

இஸ்லாமிய அறிவையே ஜீவனாகக் கொண்டிருந்த கலிபாக்கள் எச்சமயத்திலும் சமத்துவத்தைக் கடைப்பிடித்தே வாழ்ந்திருக்கிறார்கள்.

கலீபா ஹஜரத் உமர் அவர்கள் தன் வேலைக்காரரோடு பாலஸ்தீனத்துக்கு புறப்பட்ட போது அவர்களிடம் ஒரு ஒட்டகமே இருந்தது. ஹஜரத் உமர் அவர்கள் கொஞ்சதூரமும் வேலைக்காரர் கொஞ்சதூரமுமாக மாறிமாறி ஏறிச்சென்றார்கள். பாலஸ்தீனம் அடையும்பொழுது ஒட்டகைமேல் வேலைக்காரர் உட்காரவேண்டிய முறையாக இருந்ததைப் பார்த்த வேலைக்காரர் ஹஜரத்உமர் அவர்களைப்பார்த்து "ஊர் நெருங்கிவிட்டதால் தாங்களே ஒட்டகையின் மேல் ஏறிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொண்டார். ஹஜரத் உமர் அவர்கள் அதற்கு இணங்கவில்லை. இஸ்லாமின் கலீபாவாகிய ஹஜரத் உமர் அவர்கள் தன் வேலைக்காரர் ஏறியிருந்த ஒட்டகையின் கயிற்றைப் பிடித்தவர்களாய் பாலஸ்தீனில் பிரவேசித்தார். இஸ்லாமிய கலீபாவின் பெருமை, கீர்த்தி முதலியவைகளைக் கேள்விப்பட்டு பார்ப்பதற்காக வந்த ஜனத்திரள் ஹஜரத் உமர் அவர்கள், (வேலைக்காரர் ஏறியிருந்த) ஒட்டகையின் கயிற்றைப்பிடித்து நடந்து வருவதைப் பார்த்து ஆச்சரியமுற்றது.

முஸ்லிம்களின் நிலைமையை யறிந்து வரும்படி "ரோம்" தேசத்து படைத்தலைவனால் அனுப்பப்பட்ட உளவாளி திரும்பிச்சென்று படைத்தலைவனை நோக்கிக்கூறியதாவது "முஸ்லிம்கள் இரவு முழுவதும் வணங்குவதில் தவசிகளைப்போலிருக்கின்றனர். ஆனால் பகலில் வீரர்களாயிருந்து வேலை செய்கின்றனர். தங்கள் அரசகுமாரனே களவுசெய்து விடினும் கையை வெட்டிவிடுவார்கள் விபசாரம் புரிந்துவிடினும்கூட அவனை கல்லெறிந்து கொன்றுவிடுவார்கள்."

"மஃஜூம்" என்னும் கபிலாவைச் சேர்ந்த ஒரு பெண் திருட்டுக் குற்றத்திற்காக கைதுசெய்யப் பட்டிருந்தாள். அவளுக்காக நாயகம் அவர்களிடம் சிபார்சு செய்யும்படி குரைஷிகள் ஹஸ்ரத் உஸாமாவைத் தூண்டினார்கள். குரைஷிகள் வேண்டுகோளுக்கிணங்கி உஸாமாவும் நாயகத்திடம் சிபார்சுசெய்தார். நாயகம் அவர்கள் ஜனங்களைக்கூட்டி "ஓ ஜனங்களே! உங்களுக்கு முன் தோன்றினவர்கள் பெரிய மனிதர்கள் திருடிவிட்டால் அவர்களை சும்மா விட்டுவிடுவார்கள். சாதாரண மனிதர்களாயின் தண்டிக்கப் பின்வாங்கமாட்டார்கள். அதனால் நாயன் பேரில் சத்தியமாகச் சொல்லுகிறேன். முஹம்மதுடைய மகள் பாத்திமாவே திருடிவிடினும் சந்தேகமின்றி அவர்களுடைய கையும் வெட்டப்படும்" என்று அறிவித்தார்.

குற்றம் புரிபவர்கள் யாராயிருந்தாலும் வித்தியாசம் பாராட்டாமலேயே சிக்ஷிக்கக்கூடியதாகஇருக்கின்றது இஸ்லாமிய சட்டம். இதுவே இஸ்லாமிய உத்திரவின் உண்மையான அம்சமாகும். உண்மையில் இஸ்லாமிய சமத்துவத்தின் படிப்பிணையும் இதுவே.

மேல் நாட்டின் எதேச்சாதிகார முறையும், உயர்வு, தாழ்வு என்ற விகாரமான வேற்றுமையும், பிரான்ஸ்தேசத்தில் ஏற்பட்ட மாறுதலுக்குப் பிறகு ஒழிந்துவிட்டதென்று சொல்லப்படுகின்றது. ஒருவன் சிரசில் கிரீடத்தையும், கரத்தில் ஆட்சியின் பலத்தையும் வைத்துக்கொண்டிருப்பினும், அவனும் மற்றவர்களும் மனிதனென்ற முறையில் சமத்துவமானவர்களென்றே ஐரோப்பா கூறுகின்றது. எதேச்சாதிகார ஆட்சிமுறை மடிந்து சட்ட திட்டங்களுக்குப்

பெரும் கௌரவம் ஏற்பட்டு சமத்துவமும் சுயேச்சையும் மேல் நாடு முழுவதிலும் ஓங்கிவிட்டதாக சொல்லப்படும் இந்நாளில் எந்த அரசனாவது நாயகம் அவர்கள் வெளியிட்டதைப் போன்ற சமத்துவத்தின் உண்மையான தத்துவத்தை பிரகடனம் செய்து அதற்கு தன்னையும் கட்டுப்படுத்தி நடக்கத் தயாராக இருப்பானா?

இங்கிலாந்து அரசர்கள் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவர்களென்று பறை சாற்றப்படுகிறது. அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய நாடுகளின் பிரஸிடெண்டுகள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு மட்டும் நிர்வாகப் பொறுப்பேற்ற அதிகாரிகள் என்பதைத் தவிர வேறில்லை யென்று அறிவிக்கப்படுகிறது. ஆனால் அத்தேசங்களின் நிகழ்ச்சிகளைச் சேகரித்துப் பார்ப்போமாயின் மனிதனை மனிதன் பூஜித்த கற்காலத்தில் நிகழ்ந்ததுபோன்ற தீச்செயல்களும், அக்கிரமச்செய்கைகளும் அங்கு மலிந்துகிடப்பது வெளியாகும்

ஒரு சாதாரண பிரஜை தன்மீது தாக்கல்செய்த தாவாவுக்கு பதில் கூறுவதற்காக மேல்நாட்டின் எந்த அரசனாவது நீதிஸ்தலத்தில் ஆஜரானாரென்று அந்நாட்டார் பகரமுடியுமா? மதீனாவில் மசூதியை நீதி ஸ்தலமாக ஏற்படுத்திக்கொண்டிருந்தது மட்டுமின்றி தமாஸ்கஸ், பக்தாத் ஆகிய தேசங்களில் இருந்த நீதிஸ்தலங்களிலும் கலீபாக்கள் சாதாரண பிரஜையைப் போல் விஜயம்செய்த வரலாற்றை சரித்திரத்தில் காணக்கிடைக்கின்றன. அநியாய அரசாட்சியை அழிக்க அரபு தேசத்தில் புகழுடன் தோன்றிய அரசராகிய நாயகம் அவர்கள் வழங்கிய நீதியைப்போல் மேல்நாட்டு அரசன் தன் புத்திரியையும் ஒரு சாதாரண சோல்ஜரின் புத்திரிக்கு சமமாக தண்டிக்கப்பின் வாங்க மாட்டான் என்று கூறிக்கொள்ள மேல்நாட்டுச் சரித்திரத்தில் ஒரு உதாரணமேனும் காட்டமுடியுமா?

சட்டப்படி உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வித்தியாசம் இன்றைக்கும் மேல்நாட்டில் இல்லையா? அரசர் நீதிஸ்தலத்திற்கு வர முடியாதென்றும், எவ்வுயர்தர நீதிபதியும் அரசருக்கு சம்மன் பிறப்பிக்கக் கூடாதென்றும் சில வருஷங்களுக்குமுன் லண்டன் பார்லிமெண்ட் வெளியிட்ட அறிக்கையை நாம் மறந்துவிட்டோமா! இது ஒரு சாதாரண விளம்பரமல்ல. சந்தேகமற இதுவே அந்நாட்டின் சட்டம். “சமத்துவம், சமத்துவம்” என்று பறை சாற்றிக்கொண்டே அரசர் நீதி ஸ்தலத்திற்கு வாமுடியாத அவ்வளவு கௌரவம் வாய்ந்தவர் என்ற சட்டம் ஏன் நிறைவேற்றப்படவேண்டும்?

பல நூற்றாண்டுகளாக நடந்த பெரும் கிளர்ச்சிக்குப் பிறகு மேல் நாடு அடைந்துள்ள சுயேச்சை இதுதான். ஆனால் ஆறாவது நூற்றாண்டின் இருளடைந்த காலத்தில் நாயகம் அவர்களின் கரத்தால் ஏற்றிவைக்கப்பட்ட சமத்துவ தீபம் பிரகாசிப்பதை நாம் பார்க்கவேண்டாமா? இஸ்லாமின் பரிசுத்தமான பிரசாரம் எத்தகையதென்பதை சிந்திக்க வேண்டாமா? முகம்மதுடைய மகள் பாத்திமாவே களவு செய்யினும் அவளுடைய கையும் வெட்டப்படும் என்பதல்லவா இஸ்லாமின் சமத்துவம்.

## முதலாவது கலீபாவின் முன்னுரை

ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் அவர்கள் கிலாபத்தின் பொறுப்பேற்றபோது செய்த ஆரம்ப பிரசங்கமாவது:—

“உங்களுள் பலமுள்ளவர்களிடமிருந்து சேரவேண்டியவைகளை நான் பெற்றுக்கொள்ளாதவரை அவர்கள் என்னிடம் பலஹீனர்களேயாவர். உங்களுள் பலஹீனர்களுக்கு கொடுக்கவேண்டியவைகளை நான் கொடுத்துத் தீராதவரை அவர்களே மிகவும் பலமுள்ளவர்களாவர்.”

சமத்துவத்தின் இவ்வித போதனை இஸ்லாமைப் பின்பற்றுபவர்களின் உள்ளத்தில் பெரும் உணர்ச்சியை உண்டுபண்ணியிருந்தது. பெர்ஷிய யுத்தத்தின்போது ஈரான் படைத்தலைவரிடம் தூதராகச்சென்றிருந்த முகைரா அப்படைத்தலைவனுக்குச் சமமான ஆசனத்தில் போய் அமர்ந்தார். ஆனால் தர்பார் சேவகர்கள் அவரை ஆசனத்திலிருந்து இறக்கிவிட்டனர். “முஸ்லிம்களாகிய நாங்கள் ஒருவரைவிட மற்றொருவர் தாழ்ந்தவர் என்று கருதுவதில்லை. ஆனால் உங்கள் நடத்தையோ பெரும் விந்தையாக இருக்கின்றது.” என்று பகர்ந்தார் முகைரா ஆச்சரியத்துடன். இஸ்லாமுக்கு உரித்தான எண்ணிறந்த உயரிய லக்ஷணங்களை காலவித்தியாசம் மறைத்துவிட்டதாயினும், நாகரீகம் படைத்த மேல்நாட்டு வணக்க ஸ்தலங்களில் இன்றைக்கும் கருப்பு நிறத்தவர்கள் வெள்ளை நிறத்தவர்களுடன் சமமாக வணங்க முடியாதென்பதை எவரேனும் மறுக்க முடியுமா? ஆனால் இஸ்லாமிய வணக்க ஸ்தலங்களான மசூதிகளில் ஒரு சாதாரண முஸ்லிம் பெரும் தலைவருக்கு சமமாக மட்டுமின்றி ஆப்கன் அரசருடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று தொழுவதை இன்றைக்கும் காணலாம். அந்த சாதாரண முஸ்லிமை அவ்விடத்தினின்றும் அகற்ற எவராலும் இயலாது.

மேற்கூறப்பட்டுள்ள இஸ்லாமிய போதனையையும், முஸ்லிம்களின் நடவடிக்கையையும் அறிந்த எவரும் இஸ்லாமில் சமத்துவமில்லை என்றாவது முஸ்லிம்கள் மேல் நாட்டவரிடம் சமத்துவம் கற்றுக்கொள்ள வேண்டுமென்றாவது சொல்லமுடியுமா?

# இன்றைய நிஜாம் பட்டத்தின் வாரிசல்ல.

முஸ்லிம் தினசரி பத்திரிகையொன்று பிரசுரித்திருக்கும் நிஜாமின் வாழ்க்கை வரலாற்றில் கீழ்வரும் வாக்கியங்கள் மிகவும் விநோதமானவையாகும்.

"நிஜாம் மீர் உஸ்மான் அலி 1911ல் பட்டத்துக்கு வந்தார். அவர்பட்டத்தின் உண்மையான வாரிசு அல்ல. சிறு வயதிலிருந்தே அவர் வளர்ந்துவந்த சூழ்நிலை அவரை இன்றைய நிலைக்கு உயர்த்திவிட்டது. தன்னை ஒரு ஷோபாயாகவும் இந்தியா பூராவிலும் ஆங்கிலேயரின் பெரியதாஸனுகவும் அவர் இபற்கையாகவே கருதி வந்திருக்கிறார். முதலாவது மஹா யுத்தம்மூண்டவுடன் பூரணஒத்துழைப்பு அளிப்பதாக சமஸ்தானங்கள் சார்பில் மன்னர்பிரானுக்கு உறுதியளித்த சமஸ்தானதிபதிகளில் நிஜாம் முந்திக்கொண்டிருந்தார்."

மேற்கண்ட விதம் எழுதிய எழுத்தாளியின் கூற்றுப்படி இன்றைய நிஜாம் ஏன் பட்டத்தின் வாரிசு இல்லையென்று பொதுமக்கள் ஆச்சரியப்படலாம் ஆனல் நிஜாமின் பூர்வோத்திரத்தையும் உண்மை விஷயங்களையும் தெரிந்தவர்கள் ஆச்சரியப்படவேண்டிய அவசியமில்லை. இவ்விஷயத்தில் நமக்குத்தெரிந்த சில உண்மைகளை வெளியிடுவதால் மேற்படி எழுத்தாளி எழுதியிருப்பதில் அர்த்த மில்லாமலில்லை என்பது விளங்கும்.

பல வருஷங்களுக்கு முன் ஹைதராபாத் பிரதமர் மஹாராஜா ஸர் கிருஷ்ணபிரஸாத் டில்லிக்கு வந்தபோது காஷ்மீர்கேட்டிலுள்ள ராவ்பஹதூர்லாலா சுல்தான் சிங் பங்களாவில் தங்கினர். காலை எட்டு அல்லது ஒன்பது மணி இருக்கும். 'ரியாஸத்' ஆசிரியர் அவரை பேட்டிகாணச்சென்றபோது ஏற்கனவே அங்கு வந்திருந்த ஹக்கீம் அப்துல்வஹாப் சாஹிப் (பிரக்யாதி பெற்ற காலஞ் சென்ற ஹக்கீம் நாபீனவும் டாக்டர் அன்ஸாரியின் சொந்த சகோதரருமாவார்) அவருடன் கீழ் வருமாறு பேசிக்கொண்டிருந்ததை 'ரியாஸத்' ஆசிரியர் நேரில் கேட்டிருக்கிறார். ஹக்கீம் சாஹிப்:— நாம் இருவரும் ஹைதராபாத் ராஜ குடும்பத்துக்கு எவ்வளவோ விஸ்வாஸமாய் இருந்தோம். பிரதம மந்திரியாயிருந்து தாங்கள் வாழ்க்கை முழுதும் சேவை செய்தீர்கள். நானே காலஞ்சென்ற ஆலாஹஜரத்மீர்ஸர் மஹபூப் அலிகானுடைய சொந்த வைத்தியனக பணியாற்றினேன். இன்று உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதுடன் நாம் இருவரும் நிஜாமின் கோபத்துக்கும் ஆளாகியிருக்கிறோம்.

மஹாராஜா ஸர் கிருஷ்ண பிரஸாத்:—ஹக்கீம் சாஹிப்! இதில் யாருடைய தவறும் இல்லை. காலஞ்சென்ற எஜமானுக்கு நாம் செய்த துரோகத்துக்கு தண்டனை அனுபவிக்கிறோம். நம்மை தண்டிக்க இயற்கைக்கு உரிமையுண்டு.

'துரோகம்' என்ற வார்த்தையைக்கேட்டு ஆச்சரிய மடைந்த 'ரியாஸத்' ஆசிரியரைப் பார்த்து ஸர் கிருஷ்ணபிரஸாத் சொன்னது 'ரியாஸத்' ஆசிரியருக்கு இன்றுவரை நினைவிலிருக்கிறது. "ஸர்தார் சாஹிப்! நான் சொல்லுவது தவறல்ல. உள்ளபடியே காலஞ்சென்ற நம் எஜமானுக்கு துரோகம் செய்ததற்கு தண்டனை இப்பொழுது கிடைத்திருக்கிறது. நம் பழைய எஜமானரான மீர்ஸர் மஹபூப் அலிகான் இன்றைய நிஜாமை மகனென்று ஒப்புக்கொண்டதில்லை. அவருடைய தாயார் குர்பர்காவைச்சேர்ந்த ஒரு தாஸி. அந்தப்புரத்துக்கு வந்தபோதே கர்ப்பமாக இருந்தார். இன்றைய நிஜாம் கெடுவுக்கு முன்பே பிறந்தவர். இவர் கர்ப்பத்தில் இருக்கையில் அந்தப்புரத்துக்கு வந்தபிறகுதான் கர்ப்பம் ஏற்பட்டதென்று பிரதானிகள் எவ்வளவோ சொல்லியும் ஆல ஹஜரத் நம்பவேயில்லை. முன்னலேயே கர்ப்பமிருந்ததாக அவர் அடிக்கடி சொல்லுவார். இன்றைய நிஜாம் பிறந்த பிறகு ஆலாஹஜரத்தின் சொந்த மனைவிகளுக்கும் ஆண்குழந்தைகள் பிறந்தன. அவர்களுடைய சாயலும் முக ஜாடையும் தகப்பனையே ஒத்திருக்கின்றன. உஸ்மான் அலிக்கு பட்டங்கட்ட வேண்டாமென்றும் சொந்த மனைவிகளுக்குப் பிறந்த குமாரர்களில் மூத்தவருக்கு பட்டம் கட்டும்படியும் அவர் மரணமடைவதற்குமுன் உத்திரவிட்டிருந்தார். ஆயினும் அவருடைய மறைவுக்குப் பிறகு சொந்த குமாரர்கள் மைனர்களாக இருந்ததாலும் பிரிட்டிஷார் ஹைதராபாத் நிர்வாகத்தை ஆக்ரமித்துக் கொள்ளுவார்கள்என்றும் பயந்து அப்பொழுது மேஜராக இருந்த இன்றைய நிஜாம் உஸ்மான்அலியைப்பிடித்து நாம் பட்டத்தில் உடகார வைத்துவிட்டோம். ஆங்கிலேய ஆக்ரமிப்பை தடுப்பதும் ராஜகுடும்பம் பாதிக்கப்படாமல் காப்பதுமே நம் நோக்கமாக இருந்தது.

நாம் காலஞ்சென்ற நம் எஜமானரின் உத்திரவை நிறைவேற்றவில்லை. அவருடைய உப்பைத்தின்று துரோகம் செய்தோம் அதற்காக தண்டனை அனுபவிக்கத்தான் வேண்டும். அனுபவித்தும் வருகிறோம்."

காலஞ்சென்ற ஹக்கீம்நாபீன சாஹிப் முன்னிலையில் மகாராஜா ஸர் கிருஷ்ணபிரஸாத் 'ரியாஸத்' ஆசிரியரிடம் மேற்கூறிய விதம் சொல்லியுள்ளார்.

# —: காங்கிரஸும், முதலாளிகளும் :—

இன்றைய காங்கிரஸ் மத்தியிலும், மாகாணங்களிலும் நிர்வாகத்தை நடத்தும் ஒரு அரசியல் கட்சியாகவே இருந்து வருகிறது. அதன் அந்தஸ்து, கொள்கை, லட்சியம், லட்சியத்தை அடைவதற்கான வழிகள் பழைய காக்கிரஸுக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. சோஷலிஸ்டுகள் காங்கிரஸை விட்டு வெளியேறிவிட்டதாக சொல்லப் படுவது தவறு. காங்கிரஸ் ஆட்சியின் தற்காலப் போக்கால் சமுதாயத்தின் ஒரு பிரிவினர் மட்டுமே லாபமடைய முடியும். காங்கிரஸின் இன்றைய போக்கால் பஞ்சாயத்து ஆட்சி ஏற்படுவது சாத்தியமில்லை யென்ற திண்ணமான முடிவுக்கு வந்தபிறகே நாம் காங்கிரஸுடன் இருந்த உறவை அறுத்துக்கொண்டோம். சுதந்திரப் போராட்டத்தை வெற்றியுடன் நடத்திய காங்கிரஸ் மறைந்து விட்டது. அது இன்று உயிருடன் இல்லை. அந்த காங்கிரஸ் எல்லாகட்சியினருக்கும் பிரதிநிதித்வம் வாய்ந்ததாக இருந்தது.

சுதந்திரம் கிடைத்த பிறகு காங்கிரஸ் தானகவே கலைந்துவிட வேண்டுமென்று நான் ஏற்கனவேயே சொல்லி யிருந்தேன். ஏனெனில் அன்னிய ஆதிக்கத்தை தகர்ப்பதற்கு ஐக்கிய முன்னணியின் அவசியம் சுதந்திரத்திற்குப் பிறகு இல்லை. அந்நிலையில் மக்கள் முன்னிலையில் தங்கள் திட்டத்தை சமர்ப்பித்து அவர்களுடைய ஆதரவைப்பெற முயற்சிக்கும் கட்சிகள் மாத்திரமே அவசியம். அன்று நான் சந்தேகித்தது இன்று உண்மையாய்விட்டது. குறிப்பிட்ட நலன்களுள்ள பேர்வழிகள் இன்று பழைய காங்கிரஸை பிரயோஜனப் படுத்திக்கொள்கின்றனர்.

எதிர்கால காங்கிரஸைக் குறித்த என்னுடைய நோக்கத்தை மகாத்மா காந்திஜி பூரணமாக ஏற்றுக்கொண்டிருந்தார். அரசாங்கத்தின் தொழில் கொள்கை மக்கள் ஆட்சி ஏற்படுத்துவதற்கு உதவ முடியாது. அதனல் முதலாளித்துவமே பலமடைய முடியுமே யொழிய சோஷலிஸம் வளர்ச்சி பெறமுடியாது. இந்திய அரசாங்கம் முக்கிய தொழில்களை குறைந்தது பத்து வருஷங்கள் வரை தேசிய மயமாக்க மறுத்துவிட்டது. பத்து வருஷங்களில் முதலாளிகள் எந்த அளவுக்கு பலம்பெற்று விடுவரென்று யாரால் சொல்ல முடியும். கப்பல். விமான கார்ப்பரேஷனின் புதிய மானேஜிங் ஏஜென்ஸியிடம் ஒப்படைத்து அவர்கள் அந்த அந்தமான்தீவை சுரண்டுவதற்கு அரசாங்கம் இடமளித்துவிட்டது. இனி சிந்தியா, பிர்லா, டால்மியா போன்ற சில முதலாளிகள் அந்தமானை சுரண்டிக் கொண்டிருக்க முடியும் தங்கள் சுரண்டலுக்குச் சாதனமாக உபயோகிக்க தேசிய மூலதனம் ஒரு சில முதலாளிகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

ஜெயப்பிரகாஷ் நாராயண்.

(முன் பக்கத் தொடர்ச்சி,)

இன்றைய நிஜாம் மீர் உஸ்மான் அலிகான் ஒரு தாவி வயிற்றில் பிறந்திருந்தாலும் சரி அல்லது காலஞ்சென்ற மீர்மஹப்பூர் அலிகானுடைய உண்மை மகனுக இல்லாமலிருப்பினும் சரி இன்றைய நிஜாமைக் குறைகூற முடியாதென்பதே நம் அபிப்பிராயம். ஏனெனில் இதர அறுநூறு சமஸ்தானதிபதிகளில் தகப்பனுக்குச் சொந்தமானவர்கள் யார்? சிப்பந்திகள் இதரர்களின் குமாரர்கள் எவர்? என்று யாரால் சொல்லமுடியும்! ஆனல் இன்றைய நிஜாம் தன்னுடை பிரஜைகளுடன் நடந்து கொள்ளும் முறையை மட்டும் மன்னிக்க முடியாதென்பது திண்ணம். அதற்கு எதிராக இந்திய அரசாங்கம் பலமான நடவடிக்கை எடுக்கவேண்டியதவசியம்.

(‘ரியாஸத்’ டில்லி)

## பன்ருட்டி.

5—7—48ல் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் M. V. சுதர்சன நாயுடு தலைமையின் கீழ் சபாபதி செட்டியார் சத்திரத்தில் நகர காங்கிரஸ் கமிட்டி நிர்வாகஸ்தர்கள் தேர்தல் கூட்டம் நடந்தது. கீழ்க்கண்ட நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தலைவர்:- மு. வேல்சாமி ராஜா உபதலைவர்:-து ராஜு நாயுடு காரிய தரிசி:- R. K. வேணுகோபால நாயுடு உப காரியதரிசி:-முத்துக்குமாரசாமி ஆச்சாரி பொக்கிஷதார் கு. சித்தானந்தம் நாயக்கர். தலைவர் சுதர்சன நாயுடு போட்டியின்றி ஏகமனதாய் நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு சந்தோஷத்தைத் தெரிவித்தும் சுதந்திர இந்தியாவில் காங்கிரஸ்காரர்கள் சேவையின் அவசியத்தை வற்புறுத்தியும் சீக்கிரத்தில் மதுவிலக்கு அமுலுக்கு வரப்போவதால் கள்ளத் தனமாக மது அருந்துபவர்களை கண்காணித்துப் பிடித்துக் கொடுக்க வேண்டிய கடமையையும் உழைப்பாளிக்கு தலைமை பதவி அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிப் பேசினர். R. K. வேணுகாபால நாயுடு வந்தனேபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

பா. வை. முத்துக்குமாரசாமி ஆச்சாரி,
உதவி காரியதரிசி.

## கடையநல்லூர்.

ஆசிரியர் அவர்களுக்கு, அஸ்ஸலாமு அலைக்கும்.

கடையநல்லூர் 27—6—48 அன்று K. L. M. அஹமது முஹியத்தீன் தலைமையின் கீழ் முஸ்லிம் லீக் பொதுக்கூட்டம் நடந்தது. இந்திய டொமினியன் முஸ்லிம் லீக் தலைவர் M. இஸ்மாயில், K. T. M. அஹமது இப்ராஹீம், மேடை முதலாளி M. N. அப்துர் ரஹ்மான் மற்றும் பல லீக் பிரமுகர்களும் பிரசன்னமாயிருந்தனர். M. இஸ்மாயில் லீக்கின் அவசியம் பற்றி பேசுகையில் நான் சில கேள்விகளைக் கேட்டேன். அவையாவன:—

(1) பிரிவினைக்குப் பிறகு இந்திய அரசாங்கத்திடம் பூரண விசுவாசமுள்ளவர்களாக இருப்போம் என்று சொல்லுகிறீர்களே! அதன் கருத்து என்ன?

(2) மைனாரிடி வகுப்பினர் அரசாங்கத்தின் விசுவாசமுள்ள பிரஜைகளாயிருக்கவேண்டும்; அப்படிக்கில்லாதவர்களை எந்த அரசாங்கமும் சகித்துக்கொண்டிருக்கமாட்டாது என்று மிஸ்டர் ஜின்னா சொல்லிச் சென்றதன் அர்த்தமென்ன?

(3) "லைஸமின்னா மன் தஆ இலா அஸபிய்யதி—லைஸமின்னா மன் காதல அலா அஸபிய்யதி—லைஸமின்னா மம் மாத அலா அஸப்பிய்யதி" (எவனொருவன் வகுப்புவாத திசையில் அழைத்தானோ அவன் நம்மைச் சேர்ந்தவனல்ல. எவனொருவன் வகுப்புவாத உணர்ச்சியால் சண்டை செய்தானோ அவன் நம்மைச் சேர்ந்தவனல்ல. எவனொருவன் வகுப்புவாதத்தில் செத்தானோ அவனும் நம்மைச் சேர்ந்தவனல்ல) என்று திரு நபி (ஸல்) அவர்கள் வகுப்புவாதத்தைக் கண்டித்து உச்சத்திருக்கிறார்களே! அதன் தாத்பர்யமென்ன?

(4) இந்திய பார்லிமெண்டில் இனி வகுப்புவாதத்துக்கு இடமில்லை என்று தீர்மானிக்கப்பட்ட பிறகும், முஸ்லிம்களுக்கு தனி ஸ்தாபனம் வேண்டும் என்று சொல்லுகிறீர்களே! அதனால் வருங்காலத்தில் முஸ்லிம்களின் மதம், கலாசாரம், நாகரீகத்தைப் பாதுகாக்க என்ன திட்டம் வகுத்திருக்கிறீர்கள் என்பதை சொல்லமுடியுமா?

(5) லக்னோ மகாநாட்டில் முஸ்லிம் லீகர்கள் கலந்துகொள்ள வேண்டாமென்று சொன்னீர்கள் அல்லவா! நீங்கள் மார்ச் மாதம் 10-ந்தேதி கூட்டிய முஸ்லிம் லீக் கவுன்சில் கூட்டத்திற்கு வந்தவர்கள் எத்தனை பேர், வராதவர்கள் எண்ணிக்கை எவ்வளவு, அதற்குப் பிறகும் லீக் அவசியமா?

(6) லீக் ஸ்தாபனத்தைக் கலைத்துவிட்டு காங்கிரஸ் மஹாசபையில் சேர்ந்து ஒத்துழைத்து முஸ்லிம்களின் குறைகளை எடுத்துச் சொல்லுவதால் ஏற்படக்கூடிய தீங்குகள் யாவை?

(7) ஹைதராபாத் இந்திய யூனியனில் சேராததைக் குறித்து உங்களுடைய அபிப்பிராயமென்ன?

இந்த கேள்விகளை முஸ்லிம் லீக் தலைவர்களிடம் நேரில் கேட்டு தெளிவாக விளக்கிக்கொள்வதற்காகத்தான் கேட்டேன். ஆனால் தலைவருக்கு கோபம் வந்துவிட்டது. அவர் கேள்விகளை சரிவர புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை. "நான் விசனிக்கிறேன் - எல்லாம் சொல்லியாகிவிட்டது - நாலு மணி நேரம் சொன்னாலும் தெரியாது - இப்படிப்பட்டவர்கள் ஆயிரத்தில் இரண்டு பேர்களிருப்பார்கள்" யென்று சொல்லிவிட்டு "லீக் என்ன செய்துகொண்டிருக்கிறது?" என்று நான்கேட்டதாக பொது மக்களிடம் பொய்யைச் சொல்லி, "நீங்கள் பொறுமையாக இருக்கவேண்டும், ஆண்டவனுக்கு பயந்து பச்சைப்பெட்டியில் ஓட்டுக்களைப் போடவேண்டும், உள்ளொன்றும் புறமொன்றும் பேசக்கூடாது. என் வார்த்தையில் மந்திர சக்தி இல்லை." யென்று பலவாறாகச் சொல்லி பிரசங்கத்தை முடித்துக்கொண்டார். அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கானவர்களும் கரகோஷமும் ஆரவாரமும் செய்தனரே ஒழிய, ஒரு மனிதரேனும் கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி சொல்லத் துணிந்தாரில்லை. என்னுடைய கேள்விகளையும், லீக் தலைவரின் பதிலையும் பொது மக்கள் நன்கு தெரிந்து கொள்ளவே இதை பிரசுரிக்க முயன்றேன். மக்களின் கேள்விகளுக்கு தலைவர் விளக்கமாக பதிலளிக்க கடமைப் பட்டிருக்கிறார். ஆத்திரப்படுவது சரியல்ல தலைவர் சொல்லுவது வேதவாக்கு அல்லவென்றும் எது சரி, எது சரியல்லவென்று ஆராய்வதற்குக் கூட இம்மாதிரியான கூட்டங்களில் இடமில்லை யென்பதை நான் அறிந்து கொண்டேன். உண்மைகளைக் கேட்கவோ அல்லது பேசவோ எந்த தலைவர்களாயினும் சரி! எந்த அரசர்களின் மேடையாயினும் சரி! கொஞ்சமும் அஞ்ச வேண்டியதில்லை யென்பதை பொது மக்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆகையால் முஸ்லிம் சகோதரர்கள் இனியாகிலும் தங்களுடைய "சுய அறிவை" வீணாக்கிக்கொள்ளாமல் தீர ஆலோசனை செய்து ஒரு நல்ல முடிவுக்கு வருவார்களென நம்புகிறேன். நெருக்கடியான இச்சமத்தில் நமது அரசாங்கத்தோடு ஒத்துழைத்து நம் எதிர்காலத்தை உருவாக்கமுடியும் என்பது நிச்சயம். அலைகுமுஸ்ஸலாம்.

S. T. அப்துல் காதர்,
தேசிய முஸ்லிம் செகரெடரி, கடையநல்லூர்.

# உலக அரசியல் விளையாட்டு.

[காஷ்மீரும் ஹைதராபாத்தும் .... வஜீரிஸ்தானில் .... பாலஸ்தீனம்.... யூகோஸ்லாவியாவும் ரஷ்யாவும் .... பேர்லின் அரங்கம் .... மலாயா .... . பிரிட்டனும் அமெரிக்காவும்]

## காஷ்மீர்

காஷ்மீர் அரங்கத்தில் இதுவரை நடந்திராத அளவுக்கு கடும் போர் நடக்கின்றது. நவ்ஷேரா, ஊரி, தத்வால், லதாக், போர் முனைகளில் இந்திய வீரர்களைத் தடுத்து நிருத்த எதிரிகள் முழுபலத்துடன் தாக்கி வருகின்றனர். லதாக் பகுதியில் இந்திய வீரர்களின் எண்ணிக்கை குறைவால் எதிரி முன்னேறியிருப்பதாகத் தெரிகிறது. ஆயினும் இந்திய வீரர்களுக்கு மேற்கொண்டு உதவிகிடைத்துவிட்டதால் காஷ்மீரை நோக்கி எதிரிகளின் முன்னேற்றம் தடுக்கப்பட்டு விட்டது. ஊரி,நவ்ஷேரா முதலிய இதர அரங்கங்களில் எதிரிகள் படுதோல்வி யடைந்திருக்கின்றனர். கடந்த பத்து தினங்களில் பீர்கண்டி, அலியாபாத் போன்ற முக்கிய இடங்களை இந்திய ராணுவம் கைப்பற்றியிருப்பதிலிருந்து ரஜௌரி முதல் பூஞ்ச் வரையிலும், பூஞ்சிலிருந்து ஊரி வரையிலும் உள்ள பூரா பிரதேசத்திலிருந்தும் எதிரிகளைவிரட்டுவதில் இந்தியராணுவம் கிட்டத்தட்ட வெற்றியடைந்து விட்டதென்றே தெரிகிறது. ஆகையால் மீர்பூர், கோட்லி பிரதேசங்களுக்காக கூடிய சீக்கிரம் யுத்தம் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கலாம். எதிரிகளிடம் பதினைந்துபவுண்ட் குண்டுகளை சுடும் பீரங்கிகள் இருக்கின்றன. இந்திய ராணுவத்திடம் அவ்வளவு பெரிய பீரங்கிகள் இல்லை. இந்த குறை சீக்கிரமே பூர்த்தி செய்யப்படு மென்று நம்பலாம்.

## ஹைதராபாத்

ஹைதராபாத் பொருத்த வரை இந்திய சர்க்கார் ராணுவநட வடிக்கை எடுக்கு மென்று தெரியவில்லை. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. இந்தியராணுவம் இரண்டு போர் முனைகளில் ஈடு படும் படிச் செய்ய வேண்டு மென்பதே பாகிஸ்தானின் நோக்கம். அதனால் காஷ்மீரில் கொள்ளை கூட்டத்தினர் மீது நடக்கும் தாக்குதல் தளர்ந்து பாகிஸ்தான் அதிகமான ராணுவத்தை அனுப்பி வைக்க முடியும். சுயலாபத்துக்காக இந்தியாவுக்கு தொந்தரவு கொடுப்பது ஒன்றைத் தவிர ஹைதராபாத்திடம் பாகிஸ்தானுக்கு வேறு அக்கரை எதுவும் கிடையாது.

பொருளாதார முற்றுகையால் ஹைதராபாத் திண்டாடுவதில் சந்தேகமில்லை. ஹைதராபாத்தில் இந்திய தபாலாபீஸ்கள் மூடப்படுமென்ற செய்தி மறுக்கப்பட்டிருப்பினும் கூட இந்தியக் கரன்ஸியில்லாமல் ஸ்டாம்ப், கவர், கார்டுகள் விற்கவும், வி. பி. அல்லது ரிஜிஸ்டர் பார்சல்கள் ஏற்கவும் இந்திய தபாலாபீஸ்கள் மறுக்கையில் அவைகள் மூடிக்கிடப்பதைத்தவிர வேறுவழியில்லை. ஹைதராபாத்திலிருந்து தந்தி டெலிபோன் மூலம் எவ்வித செய்தியும் கிடைக்காமலிருப்பதற்கும் அதுதான் காரணம்.

உணவு தானிய விஷயத்தில் ஹைதராபாத் ஏற்கனவேயே பற்றாக்குறைப்பிரதேசம். தன்னுடைய தேவைக்காக மத்திய அரசாங்கத்தை எதிர்பார்த்தே வந்திருக்கிறது இந்திய கரன்ஸி இல்லாமையால் அங்குள்ள வியாபாரிகள் இந்தியாவிலிருந்து தானியத்தை தருவிப்பதற்கில்லை. இவ்வித நிலைமையிலிருந்து தப்புவதற்காகவே ஹைதராபாத் இருபது கோடிரூபாய் கடன் பத்திரங்களை பாகிஸ்தானுக்கு மாற்றியிருந்தது. அவைகளும் ரத்துசெய்யப்பட்டு விட்டன. எனவே பாக்கிஸ்தானிலிருந்தும் உதவியைப் பெறுவது சாத்தியமில்லை. மேலும் பாக்கிஸ்தானுடன் ஹைதராபாத்துக்கு நாணய பரிவர்த்தனையும் இல்லை. பாகிஸ்தான் ரூபாயாக மாற்றவும் முடியாது. ஒருக்கால் கராச்சிக்கும், லண்டனுக்கும் மாற்றியிருக்கும் தன்னுடைய தங்கத்துக்கு பதிலாக பண்டங்களை வாங்கலாம். அந்த பண்டங்கள் வந்து சேருவதற்குள் ஹைதராபாத் முறிவது நிச்சயம்.

## வஜ்ரீஸ்தான்

வஜீரிஸ்தானில் அமைதி நிலவுவதாக பாகிஸ்தான் சப்ளை செய்யும் செய்திகள் வேறு துறைகளால் ஊர்ஜிதமாகவில்லை. பாகிஸ்தான் செய்திஸ்தாபனங்களும் நிருபர்களும் முதலில் அங்கு அமைதி நிலவுவதாக அறிவித்திருந்தனர். பிறகு ஏதோ குழப்பம் நடந்ததாகவும் அதை சமாளித்தாய்விட்டதாகவும் செய்திகள் கிடைத்தன. அதையடுத்து மீரான்ஷா பொலிடிகல் ஏஜெண்டு வஜீரிஸ்தானுக்குச் சென்ற தகவல் தெரிய வந்தது. பிறகு ஒன்றன் பின் ஒன்றாக கிடைத்த செய்திகளிலிருந்து வஜீரிஸ்தானில் நடந்தது சாதாரண குழப்பமல்ல வென்பதும் இப்பிபக்கிரியின்

ஆட்கள் ரஸ்மக், ததாகேல், மீரான்ஷா முதலிய பல இடங்களைத் தாக்கினர் என்பதும் வெளியாயிற்று.

எனவே இன்று வஜீரிஸ்தானில் அமைதி நிலவுவதாகவும் இப்பிபக்கிரியின் ஆட்கள் ஓடிவிட்டதாகவும் பாகிஸ்தான் பத்திரிகைகள் வெளியிடும் தகவல்களை அவ்வளவு தூரம் நம்புவதற்கில்லை. மேலும் ஓரேயிடத்தில் நின்று போரிடுவது மலைஜாதியினர் வழக்கமல்ல. அவர்கள் எப்பொழுதுமே கொரில்லா போர்வழிகள். ஆங்கிலேயர் காலத்திலும் மூன்றுநாட்களுக்கொருமுறை அமைதி நிலவுவதாக செய்திகள் வருவதும் ஒரு இடத்தைத்தாக்கிய பிறகு மலை ஜாதியினர் மலைகளில் ஒளிந்து கொள்வதும் மூன்றாம் நாள் இன்னொரு இடத்தை தாக்குவதும் சகஜம். இன்று நடப்பதும் அநேகமாக அதுதான். நவீன யுத்த தளவாடங்களைக் கொண்டிருக்கும் பாகிஸ்தான் ராணுவம் மலை ஜாதியினரை விரட்டிவிடுவது ஒன்றும் பெரிய காரியமல்ல உண்மையாகவே வஜீரிஸ்தான் முழுவதிலும் அமைதி நிலவுகின்றதா என்பதுதான் கேள்வி.

வஜீரிஸ்தானில் சில அரபியர்களும் ஒரு ஹிந்துவும் கைது செய்யப்பட்டிருப்பதாக மிஸ்டர் ஜின்னாவின் பத்திரிகை எழுதுகிறது. அரபியர்கள் விஷயம் புதிராகவே இருக்கிறது ஒருகால் மலபாரைச் சேர்ந்த அரபி தெரிந்தவர்களாக இருக்கலாம். அதை விட ஆப்கன் பிரஜைகள், அல்லது ரஷிய ஏஜெண்டுகளாயிருக்கலாமென்று எண்ண அதிக இடமிருக்கிறது. ரஷ்யாவுக்கு வஜீரிஸ்தான் அரசியலில் அக்கரையுண்டு ஆப்கன் வழியாக சில ஏஜெண்டுகள் வரிஜீஸ்தான் வந்துமிருக்கலாம்.

ஒரு ஹிந்து கைதாயிருப்பது சம்மந்தப்பட்டவரை ஆச்சரியப்படுவதற்கில்லை. இப்பிபக்கிரி பிரதேசத்தில் இன்றைக்கும் அநேக ஹிந்துக்கள் இருந்து வருகின்றனர். "ஹிந்துக்களும் என்னுடைய பிரஜைகளாவர் அவர்களை யாரும் ஹிம்சிக்கக்கூடாது" என்று தன்னுடைய மாமனார் மரணமடைந்த சமயத்தில் வஜீரிஸ்தானில் நடந்த ஜிர்கா கூட்டத்தில் இப்பிப்பக்கிரியே பேசியுமிருக்கிறார் அக்கூட்டத்தில் முஸ்லிம்லீகர்களை கண்காணிக்க ஒரு கமிட்டியும் நிர்மாணிக்கப்பட்டது. லீக் ஆதரவாளர்களை இஸ்லாமிய சட்டப்படி மரணதண்டனை விதிப்பதென்று அக்கமிட்டி முடிவு செய்துமிருந்தது.

## ஆப்கனிஸ்தானும், பாகிஸ்தானும்.

ஆப்கனிஸ்தான் வழியாக மலைஜாதியினருக்கு ஓரளவு உதவி கிடைப்பதாகத் தெரிகிறது. ஆப்கன் அரசாங்கம் உதவிசெய்யவேண்டிய அவசியமில்லையாயினும் தனிப்பட்ட முறையில் உதவிகிடைப்பது சாத்தியமே. எப்படியிருப்பினும் வஜீரிஸ்தானை கண்காணிக்க பாகிஸ்தானால் முடியாமல் போய்விட்டது வெளிப்படை. பாகிஸ்தான் எதிரிகளுக்கு எங்கிருந்தோ நிச்சயமாக உதவி கிடைக்கத்தான் செய்கின்றது.

அதிலும் ஆப்கன் வர்த்தக மந்திரி பாகிஸ்தானுடன் வர்ததக ஒப்பந்தம் செய்து கொள்ள பேச்சு வார்த்தை நடந்த காராச்சிக்கு வந்திருக்கும் சமயத்தில் நடந்த வஜீரிஸ்தான் குழப்பத்தை அலட்சியம் செய்துவிடமுடியாது இந்த குழப்பத்தால் யாருக்காவது நன்மை ஏற்பட முடியுமென்றால் அது ஆப்கனிஸ்தானாகத்தான் இருக்க முடியும்.

## யுகோஸ்லாவியாவும் ரஷ்யாவும்.

அரசியல் விமர்சகர்கள் எவ்வளவோ முயற்சித்தும் யுகோஸ்லாவியாவுக்கும் ரஷ்யாவுக்கு மிடையே ஏற்பட்டிருக்கும் அபிப்பிராய பேதத்தின் காரணத்தை தெரிந்துகொள்ள முடியவில்லை. ரஷ்யாவும் அதன் நண்பர்களும் யுகோஸ்லாவியாவுக்கு எதிராக தீர்ப்பளித்து விட்டன. அல்பேனியாவோ வியாபார உறவுகளையும் துண்டித்துக் கொண்டது. அது மட்டுமின்றி பிரெஞ்சு கம்யூனிஸ்டுகளும் யுகோஸ்லாவியாவை துரோகி என்று குறைகூறுகின்றனர். இன்னொருபுரம் யுகோஸ்லாவிய கம்யூனிஸ்டுகளும் பிரதம மந்திரி மார்ஷல்டிட்டோவும் தப்பெண்ணத்தை அகற்றும்படி ரஷ்யாவை வேண்டிக் கொள்கின்றனர்.

அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கமுடியும். இவ்விதம் யுகோவின் விமான, கடற்படை தளங்கள் மீது ஆதிக்கம் பெற ரஷ்யா முயற்சிக்கலாம் அல்லது யுகோ, ரஷ்யா இரண்டுமே சேர்ந்து பிரிட்டன், அமெரிக்காவை முட்டாள்களாக்கி யுகோவை தங்கள் வலையில் சிக்கவைக்கும் வீண் முயற்சியில் அவைகளின் கவனத்தைத் திருப்பிவிட்டு ஏதாவதொரு புதிய வேட்டையில் ரஷ்யா இறங்குவதாகவும் இருக்கலாம். இதற்கிடையில் யுகோவின் பழைய பங்கில் பாக்கி பத்துலட்சம் டாலரையும் திரும்பிக்கொடுப்பதாக அமெரிக்கா உறுதியளித்திருப்பதைப் பார்த்தால் ஏதோ விஷயமிருப்பதாகத் தெரிகிறது. நண்பனாக நடித்து அமெரிக்காவிடமிருந்து யுத்த தளவாடங்களைப் பெற்றபிறகு கையை விரித்து விடும்படி யுகோஸ்லாவியாவுக்கு ரஷ்யாவே சொல்லியும் கொடுத்திருக்கலாம்.

## பாகிஸ்தானின் கடன் காவடி.

அமெரிக்காவிடமிருந்து பாகிஸ்தான் ஒரு கோடி டாலர் கடன் வாங்கியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் பாகிஸ்தான் நிதி மந்திரி லார்ட்மவுண்ட்பேட்டனை எதிர்த்து பிரசாரம் செய்வது சிந்திக்க வேண்டிய விஷயமாகும். அதை பாகிஸ்தானின் அமெரிக்க விஸ்வாசம் என்றுமட்டும் நினைத்து விடுவதற்கில்லை. பாகிஸ்தான் நிதி மந்திரி ஒரு புரம் அமெரிக்காவிட மிருந்தும் இன்னொரு புரம் பிரிட்டனிடமிருந்தும் உத வியைப் பெற முயற்சிக்கிறார். பாகிஸ்தானில் மூல தனம் போட விரும்புகிறவர்களுக்கு அனுமதி உண்டு என்று அமெரிக்காவில் பாகிஸ்தான் ஸ்தானீகர் அறி வித்தது இங்கு குறிப்பிடத்தகுந்ததாகும்.

## மலாயா.

மலாயா கம்யூனிஸ்டு நடவடிக்கைகளின் தலைமை ஸ்தானமாகிவிட்டது. மலாயாவைப் போன்றதொரு சிறிய நாட்டில் பலாத்காரப்பேர்வழிகளை எதிர்த்து தரை, விமான, கப்பற்படைகளின் உதவியைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுவதைப்பார்த்தால் கிளர்ச்சி செய்பவர்கள் ஒரு சில கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல; பெருவாரியான பொது மக்களும் அவா களுடன் ஒத்துழைக்கின்றனர்என்பதும் அவர்களை அவ் வளவு சுலபமாக அடக்கிவிட முடியாதென்பதும் தெளிவாய் விளங்குகின்றது.

மலாயாவில் வெள்ளையர்களுக்கு இருந்து வரும் கஷ்டமெல்லாம் அங்குள்ள நிலச்சுவான்தார்கள் தொழிற்சாலை, ரப்பர் தோட்ட முதலாளிகள் அனை வரும்வெள்ளையர்களாக இருப்பதுதான். அவர்களுக்கு கீழ் வேலைசெய்யும் லட்சக்கணக்கான தொழிலாளிக ளின் நிலைமை கேவலமாய்இருந்துவருகின்றது. ஆங்கி லேயன் காலத்தின் போக்கை சரிவர உணரவில்லை அதனால் தொழிலாளர் வர்க்கம் விழிப்படைந்து விட்டது. அவர்களை தூண்டிவிட கம்யூனிஸ்டுகளே வேண்டுமென்ற அவசியமுமில்லை. சாதாரணமாக யாருமே தூண்டிவிட முடியும்.

மலாயாவில் வெள்ளையர்களின் கஷ்டங்களுக்கு இன்னொரு காரணமும் உண்டு. மலாயாவில் உள்ள எல்லா சுல்தான்களிடமிருந்தும் அதிகாரத்தைப் பிடுங்கிய ஆங்கிலேயர்கள் தங்களுடைய எதிரிகளின் எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டிருக்கின்றனர்.

## பாலஸ்தீனம்.

அமெரிக்க சூழ்ச்சி அநேகமாக பாலஸ்தீனில் வெற்றியடையலாம். மீண்டும் அங்கு போர் மூண்டு விட்டது அமெரிக்க கப்பல்களும் ஹைபாவுக்கு வந்திருக்கிறது. துரோகத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்று விளங்கும் டிரான்ஸ்ஜார்டன் மன்னர் அப்துல் லாவை டாலர்களைக் காட்டி எளிதில் மயக்கி விட முடியும். ஒருக்கால் அது முடியாவிட்டாலும் அமெரிக்கா அதிகார பூர்வமற்ற முறையில் யூதர்க ளுக்கு உதவிசெய்யத்தயாராக இருப்பதையே அமெ ரிக்க கப்பல்களின் ஹைபாவருகை எடுத்துக்காட்டு கிறது.

தற்காலீக போர் நிறுத்தத்தால் யூதர்களுக்கு யுத்த தளவாடங்கள் கிடைக்க சந்தர்ப்பம் கிட்டியது தான் மிச்சம். இனி அமெரிக்க உதவியைக்கொண்டு யூத விமானங்கள் தாக்கினால் அல்லது அமெரிக்கா யூதர்களுக்கு டாங்குகளையும், பெரிய பீரங்கிகளையும் கொடுத்து உதவினால் அங்கிலையில் அரபியர்கள் எவ் வளவு தூரம் தாக்குபிடிக்க முடியும் என்று சொல் வதற்கில்லை. சுயநலக்காரத்தலைவர்களின் போர் நிறுத்த யோசனையைக் கேட்டு அரபியர்கள் ஆபத்தில் சிக்கிக்கொண்டுவிட்டனர். அமெரிக்கா ஏற்கனவேயே கடன் கொடுத்து பாகிஸ்தானை தன் கையில் போட் டுக்கொண்டிருக்கிறது. எவ்வகையிலும் பாகிஸ்தான் அரபியர்களுக்கு உதவி செய்யாதென்பது நிச்சம்.

## பெர்லின் அரங்கம்.

பெர்லினில் நிலைமை திருந்துவதற்கான அறி குறியே இல்லை. மேற்கு யூனியன் நாடுகளுக்கு தரை மார்க்கமாக ரஷ்யா விதித்த தடை தொடர்ந்து இருந்து வருகிறது. மேற்கு யூனியன் நாடுகள் ஆகாய விமா னங்கள் மூலம் உணவு, நிலக்கரி இதர சாமான்களை அனுப்பிவருகின்றன மேற்கு பர்லின் ஜனத்தொகை இருபது லட்சத்துக்கும் அதிகம். இத்தனை மக்களுக் குத் தேவையான சாமான்கள் ஆகாயவிமானங்கள் மூலம் எத்தனை நாட்கள் அனுப்பிவைக்க முடியும் என்று சொல்வது கஷ்டமான காரியம்.

இந்நிலைமையால் நிர்ப்பந்திக்கப்பட்டு மேற்கு யூனியன் நாடுகள் பெர்லினை காலி செய்து விடுவர் என்றோ அல்லது பிரச்னை முற்றி யுத்தம் மூண்டு விடும் என்று நினைப்பதோ தவறாகும்.

பெர்லினைக்காலி செய்து வெளியேறுவதென்பது மேற்கு யூனியன் நாடுகளின் கவுரவத்தையே பாதிக் கும் விஷயம். எனவே அதை எண்ணிப்பார்ப்பதற் குமில்லை. யுத்தத்தை தொடுக்க மேற்கு யூனியன் நாடுகளும் சரி அல்லது ரஷ்யாவும் சரி தயாரில்லை என்பது நிச்சயம். இங்கிலையில் பொதுமக்களின் அமைதி குலைவதுதான் மிச்சம்.

# வளரும் ஜனநாயகம்.

—: "தராசு" :—

வளரும் ஜனநாயகத்துக்கு இரண்டு மூலக்கொள்கைகள் அவசியம். ஜனநாயகத்தின் பெயரால் அரசு நடக்கும் எந்த தேசத்திலும் சரியான முறையில் ஜன நாயகம் வளரவில்லை. வளரவிடவுமில்லை. வளரும் பயிருக்கு பூச்சியினால் கேடு உண்டாவதைப்போலவே வளரும் ஜனநாயகத்துக்கு 'கட்சி' கேட்டை விளைவிக்கின்றது மூலக்கொள்கைகளில் ஒன்று கல்வி; மற்றொன்று 'எல்லோரும் ஓரினம்' என்ற உணர்ச்சி இந்தக் கொள்கைகள் நம் நாட்டிலாவது சரியாக வளர்ச்சியடைய வேண்டும்.

ஒரு தேசத்திலுள்ள எந்த தனிப்பகுதியின் விசேஷமான ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டும் அமையும் கல்விமுறை ஜனநாயகத்தை வளர்ப்பதற்கும் நிலைக்கச்செய்வதற்கும் ஆதாரமாக இருக்காது. இந்த உண்மையை சமீபத்தில் நடந்த 'உனஸ்கோ' கூட்டத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியது எல்லா தேசத்தவர்களும் ஒப்புக் கொண்டார்கள் சாதாரணமாக ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவான முறையில் கல்வி புகட்டுவது நியாயமாகும் ஒருபாலருக்கு ஓரளவு கல்விகூடாதென்றோ அல்லது ஒரு பகுதிக்கு சிறுமை உணர்ச்சியும், ஒரு பகுதிக்கு பெருமை யுணர்ச்சியும் தாக்கூடிய கல்விமுறை இருக்கவேண்டும் என்ற வாதமோ ஜனநாயக உள்ளங்களில் தோன்றக்கூடாது. சாதாரண மக்களின் அன்றாட விவகாரங்களுடன் ஐக்கியப்படாத எந்த வர்க்கம் அல்லது பகுதியினாலும், உருவாக்கக்கூடிய புதிய ஜனநாயகத்துக்கு சேவை செய்யமுடியாது. பழைய கொள்கையைக்கொண்டே காலம் கடத்த விரும்புகிறவர்களை சீர்திருத்த முயல வேண்டும்

தேசபக்தி, சுதந்திரம், தைரியம், நியாயம், மக்களின் சேவை, ராஜிய நேர்மை ஆகிய நற்குணங்களை மக்களுக்கு போதிக்கும்போது, அவைகள் இயற்கையாகவே மேன்மேலும் விருத்தியாகும். சகிப்புத்தன்மை, நற்புத்தியுடன் நடத்தல், குறைகளை எடுத்துரைக்கவும், எதிர்ப்பதற்கு முண்டான உரிமை, சரியானமுறையில் உருவாகும் அபிப்பிராயபேதம், துவேஷ மனப்பான்மையையும் அத்துமீறிய செய்கைகள் செய்பவர்களையும் தடுப்பதற்குண்டான முறைகள் உயர்தரப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும், வயது வந்தவர்களுக்கும் அளிக்கப்படும் கல்வி திட்டத்தில் அவசியம் சேர்க்கவேண்டும் அரசியலை பொருள் சம்பாதிக்கும் சாதனமாகக் கொண்டுள்ளவர்களிடம் வெறுப்பும், சத்தியத்துக்கும் அஹிம்சைக்கும் மதிப்பும் கொடுக்கும் முறையையும் மக்களின் மனதில் பதியவைக்க வேண்டும் அவற்றை சாதிப்பதற்கு கட்டுப்பாடு அவசியம். "அரசாங்கம் நிலைத்திருப்பதற்கு அவசியமான கட்டுப்பாடு, முன்னேற்ற சிந்தனை, சிந்தித்ததை செயலில் காட்டுவதற்குண்டான வசதிகளை ஜனநாயகம் அளிக்கவேண்டும்" முதியவர்களுக்கு அளிக்கப்படும் கல்வியில் கட்டுப்பாட்டின் அவசியம், அதன் உபயோகம், வரம்புகள் வரம்புகளை மீறுதல் முதலியவற்றை உதாரணத்துடன் விளக்கிக் கூறுவது நாட்டிற்கு நன்மையாகும்.

கல்வி புனிதமான பொறுப்பைக் கொண்டது. குழந்தைகளின் மனதை விசாலப்படுத்துவது ஆசிரியர்களின் முக்கியவேலை. தனிப்பட்டவர்களையோ அல்லது சமூகத்தையோ குறுகிய நோக்குடன் பார்க்கும் கருத்தை குழந்தைகளின் மனதில் பதியவைக்காமலிருக்கவேண்டும். தனிக்கோஷ்டி அல்லது கட்சியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கல்வியை உபயோகப் படுத்தக்கூடாது. ஒவ்வொரு பிரச்னையிலும் ஆட்சேப சமாதானங்களை எடுத்துரைத்து அறிவை வளர்ப்பதே அரசியல் கல்வியில் சிறந்த அம்சம்.

மக்களில் பெரும் பான்மையோர், தாங்கள் படிப்பதைத்தான் நம்புகிறார்கள் இந்த உண்மையை உணர்ந்தே பத்திரிகைகளையும், ரேடியோவையும் கடுமையான கட்டுபாடுகளுக்கு உட்படுத்துவது நவீன சர்வாதிகாரங்களின் அடிப்படையாக இருந்து வருகிறது. ஆகவே விஷயத்தை மிகைப்படுத்திகூறும் பிரசுரங்களையும், கட்சிப் பிரசாரத்தையும் சந்தேகத்துடன் கவனிக்கவும், உண்மையை அறியும்படியான கல்வியைத்தருவதும் அரசாங்கத்தின் கடமை. இவ் வுண்மையை மக்கள் உணரும்போது மிகைப்படுத்திய செய்திகளும் வரமுடியாது, சர்வாதிகாரத்துக்கும் இடமிருக்காது.

ஒருவன் சொல்லுகின்றபடி மற்றவர்கள் பின்பற்றுவது என்ற புத்தியை விருத்திசெய்து அதன்படி நடப்பதும், தனிமனிதனுடைய விசேஷகுணங்கள் வெளிவராதபடிசெய்வதுமானபொதுஜனக் கல்விமுறை பாடு உடையதாகத்தானிருக்கும். தனிமனிதன் இருப்பது நாட்டின் நன்மைக்குதான் என்ற கொள்கையை எதிர்க்கும் கட்சியை அடியோடு ஒழித்துவிட வேண்டும். இல்லாவிடில் தனி மனிதனுக்கு உண்டான

இயற்கை சுதந்திரங்கள் குறையலாம். எந்த அரசாங்கத்திலும் பெரிய மனிதர்களுக்கு விசேஷமான மதிப்பு இருக்கிறது. ஆனல் ஜனநாயக அரசியலில் இவர்களுக்கு அந்த விசேஷம் குறைந்து சாதாரண மனிதனைப் போல்தானிருக்க முடியும். மேதாவிகளாலும், பெரிய மனிதர்களாலும் நடத்தப்படும் ஒரு அரசாங்கத்தில் சாதாரண மக்களுக்குகிடைக்கும் நன்மையைவிட நடுத்தர மனிதர்களால் நடத்தப்படும் அரசியலில் மக்கள் அதிகமாக நன்மையைப்பெற முடியும்.

அரசியலுக்கு ஒரு நீதி சொந்த நடவடிக்கைகளுக்கு ஒரு நீதி என்பதை தடைசெய்ய வேண்டும். குற்றமிழைத்ததாகக் கூறுவோரை, குற்றம்ருசுவாகும் வரையில் நிரபராதியாகவே பர்விக்கவேண்டும் என்ற கோட்பாடு வேண்டும். இத்தகைய திட்டங்களுடன் கூடிய கல்வியும் அரசியல் சுற்றுணர்ச்சியும் உலகில் மற்றப்பாகங்களில் இருப்பதைவிட பரிசுத்த முள்ளதாகவும், எளிதாகவும் இருக்கவேண்டும். இன்றைய போதன முறைகள் மூலம் அல்லது பொதுப்படையான மதக்கல்வியின் மூலம் நல்ல குணங்களை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பது என்பது முடியாத காரியம் முதியோர்களுக்கும், இளைஞர்களுக்கும் போதிக்கப்படும் கல்வியில் கீழ்க்கண்டவைகளை தெளிவாக்கவேண்டியதவசியம். "ஜனநாயகத்துக்கு சொந்தமான மதம் கிடையாது; அரசியல்—மதம் இரண்டின் வரம்புகளும் தனித் தனியானவை; மனச்சாட்சியின் சுதந்திரம் எதற்கும் அடிப்படையானது. எந்த மதக் கட்டுப்பாடு கொள்கைக்கும், தேசத்துக்கும் சம்மந்தம் கிடையாது. அரசியலையும், மதத்தையும் கலந்ததினுல் எற்பட்ட கெடுதல்கள், பிறப்பினுலும், கல்வியின் மூலம் ஒருவன் அடைந்த யோக்கியதாமசங்கள் அவனது பொதுவாழ்வு, சமூக சேவை, தொழில் முறையில் பிரதிபலிக்கின்றன மதமும், ஆத்மார்த்த கட்டுப்பாடும் நிச்சயமாக யோக்கியதாம்சங்கள் உருவாக்குகின்றன. பொதுவாழ்வில் இந்த யோக்கியதாம்சங்களையும், அவற்றை உபயோகப்படுத்தும் உணர்ச்சியை தெளிவுபடக் கூறவேண்டும். இவைகள் ஜனநாயகக் கல்வியின் அடிப்படையாகும்.

புதிய கல்வி முறையில் அரசியல் வாதிகளும், தலைவர்களும் யாராக இருப்பினும் தாங்கள் ஒரே தேசீய இனம் என்ற உணர்ச்சியிருக்க வேண்டும். ஒரே இனம் என்ற அஸ்திவாரமில்லாது வேறுவழியில் பலமுள்ள ஜனநாயகம் அமையாது. ஜனநாயகத்துக்கு இரண்டு உள்ளர்த்தமுள்ள சக்திகள்தான் உண்டு. தேசீப இனமுப், மதமும்தான் இவைகள் எந்ததேசத்திலும் மதம் தேசீய கட்டுப்பாட்டுடன் இருக்கும் தன்மையை இழந்து விட்டது. அரசாங்கத்திலிருந்து மதம் பிரிக்கப் பட்டதினுல் அதிக பரிசுத்த முள்ளதாய் விட்டது தனி நபரின் பொறுப்பில் வந்துவிட்டது மதம் பலசமயங்களில் மனிதர்களை பிரித்து வைத்திருக்கிறது. தேசீய இனம் எப்பொழுதும் ஒன்றுசேர்க்கும் தன்மையைக்கொண்டது. உலகத்தில் தேசீயத்துக்கும் தேசீய இனத்துக்கும்தான் இன்று சக்தி அதிகமாக இருக்கின்றது. இதனுடைய பலத்தை மக்கள் உணர்ந்து வருகிறுர்கள். பலாத்காரத்தைக் கிளப்பக்கூடிய பழிவாங்கும் நடவடிக்கைகளும் பிறரை துன்புறுத்துவதும் தேசீய உணர்ச்சியை கேவலமாக்குகின்றன என்ற எண்ணம்தான் இன்று நம்மை காப்பாற்றி வருவது

தேசீய இனம் என்பதையே பலமேனுட்டார்கள் கண்டித்திருக்கிறுர்கள் தேசீய இனம் என்றுலும் கலப்படமாயுள்ள ஜாதீயப்பிரிவு என்று சொன்னுலும் ஒன்றுதான், இந்தியர்களும், மற்ற தேசத்திலிருப்பவர்களும் ஒரே மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லும்போது ஏற்படும் உணர்ச்சியைவிட இந்தியர்கள் இந்தியர்களாகவே யிருப்பதில் எழும் தேசீய உணர்ச்சி மிகவும் பலமுள்ளதாகும். நாமெல்லோரும் இந்திய மக்கள் ஹிந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள் கிருஸ்தவர்கள், பிராமணர்கள், ஹரிஜனங்கள் யாராக இருந்தபோதிலும் எந்த பாஷை பேசும் மக்களாக இருந்தாலும் நாமெல்லோரும் ஒரே தேசீய இனத்தினர்கள் என்ற அசையாத நம்பிக்கைதான் ஜனநாயகம் வளருவதற்குச் சாதனமாகும்.

அரசியல் முறையில் 'தேசீயம்' என்பதற்கு தரப்படும் கருத்து யுக்தி பூர்வமானது. தன்னைத்தான் காப்பாற்றிக்கொள்ளமுடியாத ஒருக்காலும் தன் எண்ணத்தை சாதித்துக்கொள்ளக்கூடாத சக்தியற்ற தேசீயத்தில் இந்தயுக்தி பூர்வம் முடியாமலிருத்தல் அவசியம். நமது ரத்தத்தில் தேசீயமும், தேசீய இன உணர்ச்சியும் உரையவேண்டும். பல்வேறு மாறுதல்களுக்கு இடையில் நம்மை ஒன்று சேர்த்து வைத்திருக்கக்கூடிய மர்மமான ஒரு சக்தியை தேசீய இனம் கொண்டுள்ளது எதிர்காலத்தில் என்ன வரப்போகிறது என்பது நமக்குத்தெரியாது. நாம் கற்பனையினுல்தான் ஜனநாயகத்துக்குள் செல்லப்போகிறோம். நீதியும், தைரியமும் அரசு செலுத்த சுதந்திரமும், சந்தோஷமும், செழுமையும், சமத்துவமும் சேர்ந்து இன்பமளிக்கக்கூடிய முறையில் நம் நாட்டை உறுதிப்படுத்தவேண்டும். காலமும், விதியும், நம்மை பலஹீனப்படுத்திய போதிலும் மனோதிடத்துடன் உழைப்போம்; ஜனநாயகத்தை வளர்க்கும் கல்வியும், தேசீய இனமும், வளரும் ஜனநாயகத்திற்கு அடிப்படையாகும்.





ORJEE PRODUCTS,
VALANGAMAN. (S. INDIA.)



பல சிறந்த

**அலாரம் டைம்பீஸ்கள்**



4½" டயல்

கைபிடியுடன் அழகிய கலர் கேஸ்

மிகவும் உறுதியாக தயாரிக்கப் பட்டவை.

ரூபா 30/-

**ஜலால் & ஸன்ஸ்,**
ராட்டன் பஜார், சென்னை.

கிளை ஸ்தாபனங்கள்
மவுண்டு ரோடு, சென்னை
அபிட் ரோடு, ஐதராபாத் டெக்கான்.


(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தது. என்னே பரிதாபம்! இவ்வீரனின் தியாகத்தாலும், இவன் போன்ற ஸர்தார் பகத்சிங், ராஜகுரு சுகுதேவன், ஜதீந்திரநாத் தாஸ், லஜபதி முதலியவர்களும், இன்னும் பற்பல இன்னல்களை அனுபவித்து தேசத்தொண்டு செய்த பல ஆயிரக் கணக்கான தியாகிகளின் தியாகத்தாலுமே இன்று நம நாடு அடிமைத் தளையிலிருந்து விடுபட்டிருக்கிறது. சுதந்திரக் கனியை ருசியுடன் புசிக்கும் நாம் அவர்களை நினைத்து மரியாதை செலுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

சுதந்திரத்துடன் நம் நாடு உலகில் விளங்க வேண்டுமென்பதற்காகவே தேசபக்தியுள்ள இளங் காளை பாபுகான் தனது உயிரை சந்தோஷத்துடன் பலியிட்டான். அவன் செய்த தியாகம் இந்தியர்களுக்கும், குறிப்பாக முஸ்லிம்களுக்கும் பெருமையைக் கொடுப்பதுடன், "தேச பக்தியுடன் வாழுங்கள்" என்றும் போதிக்கின்றது. அப்படிப்பட்ட வீரனின் சமூகத்தில் உதித்த சில முஸ்லிம்கள் தேசியத் துரோகிகளாகவும், ஐந்தாம்படைக்காரர்காரர்களாகவுமிருந்து சுண்டைக்காய் ஹைதராபாத் ஏதோ இந்திய முஸ்லிம்களுக்கு சாதித்துவிடப் போகின்றது என நினைத்து இந்திய யூனியனை (சுதந்திரத்துடன் வாழும் நாட்டை) ஒழிக்க முற்படுவது விந்தையாகும். ஆகவே, இந்திய முஸ்லிம்கள் இளங் காளை பாபுகான் எதற்காக சேவை செய்து உன்னத மரணத்தை ஏற்றானோ அவனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஆபத்தைத் தடுப்பதற்கும் முற்படுவார்களாக!

## ஆஸாத் சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.